KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ௵ ஏப்ரல் ௴ 18 ௳ [No. 16

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 241
2. வில்லிபாரதம் (வீமார்ச்சுனர்) K. T. விஜயராகவாச்சாரியார் B. A. 243
3. நரவாகன தத்த சரிதம் S. சோமசுந்திர தேசிகர் 244
4. கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்) T. N. சேஷாசலம் B.A., B. L., 247
5. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 1.) Shakespeare's "Othello" 249
6. கம்பர் சிருட்டியிற் பிறந்த கற்பினள் K. நாராயண ரெட்டிகாரு 250
7. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 6-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 252
8. சூரியன் (பூமி, சந்திரன்) E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T., 254
9. வர்த்தமானம் 256

## கலாநிலயம்

### சமயச் சேர்க்கை

ஒருவருடைய சமயம் அல்லது மதம் எனப்படுவது இன்னதுதான் என்று யாரும் இதுகாறும் நிச்சயமாக வரையறுத்துக் கூறியிருக்கின்றனர் என்று கொள்வதற்கில்லை. சைவன், வைணவன், கிறிஸ்தவன், என்று இயம்பிக்கொள்வதெல்லாம், ஜனத்தொகைக் கணக்கிற்கும், மகாநாடுகள் கூடுவதற்கும் நிலைக்களமாவதன்றி ஒருவனுடைய சமயத்தைச் சாற்றுவனவோ ஆகா. இவ்வகைச் சமயநிலையைச் சோதிக்குங்கால் அவன், "நான் இன்னசமயத்தைச் சேர்ந்தவன்" என எண்ணியிருக்கிற பான்மை புலப்படும். அப்படி எண்ணித்தான் இருக்கின்றானோவென்பதும் சந்தேகமே; அன்னவாறு பேசுகின்றானென்பதே பெரும்பாலும் நிசம். இதுவோ, அவனுடைய சமயம் ஆகாது. இதற்கெதிர், என்ன சமயம் ஒருவனைச் சேர்ந்திருக்கின்றதோ, அதுவே அவனுடைய சமயம் என்னத் தகும். இவன் ஒரு சமயத்தைச் சேர்ந்தவனாயிருப்பது கருத்தாயின், சமயத்தினது உடைமை இவனேயொழிய, சமயமோ இவனுடைய உடைமையெப்படி ஆகும்? இன்ன சமயத்தின் உடைமை இவன் என்று கூறுவதே பொருந்தும். சமயத்திற்கே இவன் கிழமைப் பொருளாகின்றனன்; அதுவும், பிரிதின் கிழமையேயன்றித் தற்கிழமையும் அன்று என்று எண்ணியேங்கவேண்டியிருக்கின்றது. எனின் ஒருவனை, "இவன் ஒரு மதத்தினன்" என்பதும், அல்லது "இவன் ஒரு பேயன்" என்பதும் பெரும்பாலும் ஒக்கும். ஒருவனை நோக்கி 'இவன் பேயன்' என்போமெனின், 'பேய் இவனை உடைத்தாயிருக்கின்றது' என்பது பொருளாமன்றி, 'இவன்பேயை உடைத்தாயிருக்கின்றான்' என்றபொருள் அதற்கில்லை. இன்னவாறே, "இந்தச் சமயத்தினன் நான்" என்று பேசும்போதெல்லாம் ஒவ்வொருவனும், சமயத்தின் உடைமை தானா, அல்லது தன்னுடையது சமயமா என்பதனைச் சற்றே ஆழ அமர்ந்து சிந்தித்துப்பார்த்தல் சாலப் பயன்தரும்.

ஒருவன், தான் ஒரு சமயத்தைச் சேர்ந்தவன் என்னும்படி நினைத்திருப்பதும் விவகரிப்பது மந்தத்தில் வீணேயாகின்றன. இதனால் இவனுக்கும் பயனில்லை, இவன் சேர்ந்திருக்கின்ற சமயத்திற்கும் பயனில்லை. பயனின்மையோடு நிற்காமல், தீமைகளும் புரிகின்ற இனத்ததாம் இச்சேர்க்கை. மற்று, சமயமானது இவனை வந்து சேர்ந்திருக்குமாறாற்றான், அதனை அவனுடைய சமயம் என்னலாம். அப்பொழுதுதான் அது அவன் உடைமை; அப்பொழுதுதான் அவன் ஒரு சமயச் செல்வன் ஆகிறான். இதனையே உண்மையிற் சமயச்சேர்க்கை என்பது தகும். இதற்கெதிர், ஒருவன் தான் போய்ச் சேர்ந்திருப்பதாக எண்ணி விவகரிக்கும் சமயமானது சேர்க்கைச்சமயமேயாம். சேர்க்கைப் பொருளிற்கும் செயற்கைப் பொருளிற்கும் இவ்வுலகநடமாட்டத்தில் வேற்றுமை அதிகம் இல்லை. இயற்கை நமக்கு உரியது, மற்று, செயற்கைக்கோ நாம் உரியவர்களாகின்றோம். உலகத்தில் இன்று

ஊன்றி ஊன்றி அறியவேண்டிய உண்மைகளில் இது மிகவும் முக்கியமாகி நிற்கின்றது. மற்றவைகள் ஒருபுறமிருக்க, சமயத்தின்சார்பில் இந்தச் சிந்தனை எழுதல் இன்றியமையாததென நினைக்கின்றோம். சைவரும் வைணவரும் கிறிஸ்தவரும் பௌத்தரும் சமணரும் போன்றே, எல்லாச்சமயங்களுக்கும் தனிமுதற்பொருளாம் அக்கடவுளை, இல்லையென மறுப்பவராகத் தம்மைமதித்திருக்குகின்ற நாத்திகரும் இந்தச் சிந்தனையை எழுப்பிக்கொள்வதற்கு உரியவர். நாத்திகம் என்பதும் ஒரு மதமே. தாமே சென்று நாத்திகத்தைச் சேர்ந்தாரோ, அல்லது நாத்திகம் வந்து தம்மைச் சேர்ந்ததோ, என்பதை ஒருமுறைக்குப் பன்முறை, ஒரு நாளுக்குப் பலநாள், இவர் எண்ணியெண்ணிப் பார்த்து இவ்விடயத்தில் ஒரு முடிவிற்கு வர முயல்வார்களாயின், உரைத்தற்கரிய உவகையை அடைந்தவராவார்.

முன்னிங்குக் குறித்திருப்பவைகளின் உட்கருத்தை உரைப்பதேனும் உணர்வதேனும் எளியதன்று. உலகநடமாட்ட விவகாரங்களுக்கிடையேஇத்தகைய சிந்தனைகள் எழுவதுமில்லை, எழுந்தாலும் மிகவிரைவில் உருத்தெரியாமல் கலைந்தமிழ்ந்து போய்விடுகின்றன. ஆயினும், அல்லலும் அலைச்சலும் ஆரவாரங்களும் நிறைந்த இம்மானுட நடமாட்டங்களுக்கிடையேயும், அதனில் அளவிறந்து ஈடுபட்டிருக்கின்ற நிலையிலுங்கூட, யாவனேயாயினும், எல்லோரும், தான் தன்னுடனே தனியாக இருக்கின்ற வேளை சிறிதேனும் வாய்க்காமல் ஒரு நாளும் கழிவதில்லை என்பதும் நிச்சயம். அவ்வொரு வேளையே யாவற்றினும் புனிதமாயது; அப்பொழுது மனிதன் உழைக்கின்ற அடிமையாவதன்றி, இருக்கின்ற அரசனாகின்றான். செய்கையனைத்தும் மானுடச்சிறுமையின் பாலதே; மற்று, இருக்கையே அவனுடைய பெருமையின் வீரமாம். உயிரைச்சுமக்கும் ஊடாட்டங்களினின்று விலகி, வாழ்கின்ற வேளை யெனத்தகுவது, ஒருவன் தன்னுடனே தானே தமியனாய் இருக்கின்ற அச்சிறுவேளையேயன்றி வேறில்லை. இப்படி யொருவன் தன்னுடனே தான் தனியாயிருக்கின்றவேளை அவனுக்கு என்னவாகின்றது என்பதன் மதிப்பே ஒவ்வொருவனுக்கும் அவனவன் சமயத்தின் தன்மையை விளக்கித் தருதல் வேண்டும்.

ஒருவன் தன்னுடன் தானே தனியாக இருத்தல் எனும் இந்நிலைமையின் அருமை எதனுள் அடங்கியிருக்கின்றது எனவினவுவதும் இயற்கையே. மற்று, இதனிற்கு உரிய விடையைப் பெறுவது இயலாததுமன்று. ஆழ்ந்து நோக்குங்கால், நாம் அனைவரும் ஒருவகையில், எப்பொழுதுமே தனியாகத்தான் இருக்கின்றோம் என்று கூறுவதும் பிழையாகாது. உலகவிவகாரங்களில் ஈடுபட்டுச் சுழன்றுகொண்டிருக்கும் வேளைகளிலுங்கூட அன்னவைகளில் ஒவ்வொன்றிற்கும் அவ்வப்போது நம்மில் ஒவ்வொரு பாகத்தையே செலுத்திவைக்கின்றோமல்லது எதனிற்கும் நாம் நம்முடைய முழுமையையும் அப்படியே எடுத்தடியுடன் அளித்துவிடுவதில்லை. முழுமை யென்னும் தன்மை எப்பொழுதும் நம்முடன் கலந்தேதான் இருக்கின்றது. அம்முழுமை உளதென்பதை அறியாமலிருக்கலாம்; அறிந்தும் மறந்திருக்கலாம். அறியாதார்க்கு அறிவுறுத்தவும், மறந்தவரை நினைவூட்டவும் ஏற்றதாக அமைந்திருக்கும் வேளை அத்தனிமையாதலால் அது அத்துணைப் புனிதமாகக் கருதற்குரியது. அது புனிதமாவதும் பழுதடைவதும் நம்மிற்றான் பொருந்தியிருக்கின்றது. ஒருவனுடைய மதம் அவனுடைய 'சொந்த விஷயம்'; அது அவனுடைய புறஉலக நடமாட்டத்தைச் சார்ந்ததன்று; அவனுடைய முழுமையைத் தழுவிக்கொண்டு நிற்பதது. இம்முழுமையின் அழகு தோன்றுவது தனிமையிற்றாறுதலால், ஒருவன் தன் தனிமையை என்னசெய்கின்றான் என்பதைக்கொண்டே அவன் மதத்தின் இயல்பை மதித்தல்வேண்டும் என்று முன்னர்க் கூறினோம்.

இன்னான் இன்ன செய்து கெட்டனன் என்றும் கெடுத்தானென்றும், நன்மையை அடைந்தான் என்றும் அடைவித்தான் என்றும் மனிதர் தம்மிடையே பேசிக்கொள்ளக் கேட்கின்றோம். இந்தக்கேடும் நன்மையும் ஒருவன் செய்கையால் விளைந்ததாகத் தோன்றுந் தோற்றமோ முற்றிலும் நம்பத்தகுந்ததுஅன்று. ஒன்றுஞ் செய்வதற்கியலாமல் சும்மாவிருந்த வேளைகளில் ஒருவன் தன்னை விற்றனனோ அல்லது தான் ஒன்று வாங்கிக்கொண்டனனோ என்னுங்கேள்வியே, அவனுக்கும் அவனால்இவ்வுலகத்திற்கும் விளைகின்ற நன்மைக்கும் தீமைக்கும் உத்தரம் சொல்லவேண்டியதாயிருக்கின்றது. ஆயினும், இந்த நன்மைதீமைகளைப்பற்றி இக்கட்டுரையளவுஇப்பொழுது சிந்திக்கவேண்டா. ஒருவகையில் நோக்குங்கால்மானுடமுழுமையானது நன்மையையேனுந் தீமையையேனுஞ் சாராமல் கடந்துநிற்கின்றவொன்றுமென்று கூறலாம்.

சமய உணர்வின் பிறப்பிடத்தை அறியவும், அவ்வுணர்வின் உண்மையை ஏற்றுக்கொள்ளவும் நாம் முயலுங்கால், மனிதனின் இம்முழுமையாம் காட்சியை மறவாமல் கண்முன் நிறுத்திக்கொள்ளல் நலம். இதற்கு, உலகமாகிய இவ்விடத்தில், கண்ணிற்குக் கோசரமாகின்றன உருவமாய்த்திரண்டுஅவன்தென்படுகின்ற வளவினோடே அவனைப்பற்றி நாம் கொள்கின்ற மதிப்பை நிறுத்திவிடுதல் போதாது. இதற்கு முன் ஓர் தலையங்கத்தில் நாம் குறித்திருக்கின்றபடி காலத்தைச் சார்ந்து அவன் சிறக்கின்ற ஓர் தோற்றத்தையும் நாம் சிந்தனைசெய்துகொள்ளவேண்டும். நிமிடம் நிமிடமாக நாள் நாளாக வருடம்வருடமாக, இடையறு ஒரு தொடர்பினனாய் அவன் பிறப்பிற்கு முன்சென்ற அப் பெருநெடுங் காலத்திற்கும் அவன் இறப்பதற்குப் பின்நிற்கும் பெருநெடுங் காலத்திற்குமிடையே, எண்ணில் பல்கோடி அண்ட கோளங்களெல்லாம் மிதந்தலைந்துபறக்கின்ற சில தூசிகள் என்னத்தன்னுள் கொண்டிருக்கும் இவ் வாகாசப் பெருவெளியாம் இடத்தில்நடமாடுகின்றனிவும் உடன் இல்லையாயின் மனிதனை நாம் ஒருபொழுதும் உணரமாட்டோம். இத்தனை நெடிய காலத்தையும் இத்தனைப்பெரிய இடத்தையுங்கொண்டு ஒருவன்எவ்வண்ணம் தன்னைத்தானே கண்டுகொள்கின்றானோ அதுவே அவன்மதம். இதற்குக் குறைந்தால் ஒருவன் மனிதன் அல்லன். மனிதரல்லாதார்க்கு மதம் என்பது ஒன்று எங்கு உளது!

# வில்லிபாரதம்

[229-வது பக்கத் தொடர்ச்சி]

## வீமார்ச்சுனர்.

இனி அருச்சுனனது பண்பினைப்பற்றி நாம்கண்டறிவனவற்றைப்பார்ப்போம். இவனைப்பற்றிமிகுதியாக ஒன்றும் கருதுவதற்கில்லை யென்றே நினைக்கின்றேன். சுருங்கச்சொல்லுங்கால், இவன்மிகுந்த அதிட்டசாலி; அதிட்டதேவதையின் வளர்ப்புச் செல்வன் என்னும் வாக்கியமொன்றிலேயே இவனதுபண்பினை விளக்கிக் கூறலாம். அதிட்டதேவதையின் வரப்பிரசாதங்களான அழகு, ஆற்றல், பெண்போகம், உடன்பிறப்பு, புத்திரச் செல்வம் முதலிய யாவும் வாய்ந்தவன். ஆற்றலில் இவனுக் கெதிர்நிற்க ஒருவருமில்லை; இருந்தாலும் எதிர்த்து வெற்றிகொண்டவரோ யாருமில்லை. இவனது அழகினைக்கண்டு பல மாதரும் மையலுற்று இவனுக்கு ஆசைநாயகியராயினர். அதனால், ஒருத்தியிடம் இடையறாத நேசம் செய்து, அந்நேயத்திற்கு இடையூறுநேர்ந்து பின் வாழ்க்கையெல்லாம் துன்பமயமாக மூடப்படும் கதி இவனுக்கு நேர்வதற்கில்லை*. மற்றையபடி, பாரதத்தில் நடந்த அவ்வளவு கடுமைகளிலும் துயரங்களிலும் இவனதுபங்கு மிகக் குறைந்ததே. யாவற்றிலும் மிக்க கொடுமையான சூதுபோர்ச்சருக்கத்தில் வீமன் கோபக்கனலாகக் கொழுந்துவிட்டெரிந்து,

பாஞ்சாலிக் கரசவையில் பழுதுரைத்தோன்
உடலெனது படையா மேழி
போஞ்சாலின் நிணம்சொரியத் துணைவரொடு
குலமாளப் பொருவன் யானே
வண்டாரும் குழல்பிடித்து மாசளித்த
மன்னவன்தன் உடல் குருதி
உண்டாகம் குளிர்வதன்முன் இக்கையால்
புனலுண்ணேன் ஒருகா லென்கைத்
தண்டால்வெம் புனலெற்றி மீதெழுந்து
விழுந்திவலை தண்ணீ ராகக்
கொண்டாவி புரந்திடுவன்......

என்றெல்லாம் கடுவிரதமேற்கொண்டபோது, அருச்சுனனது மனப்பான்மையில் சஞ்சலம் எவ்வளவில் நின்றதென்பதை அவன் செய்த சபதத்தினின்றும் கண்டுகொள்ளலாம்—

பகலவன்தன் மதலையுயிர்ப் பகைப்புலத்துக்
கவர்வேனென்னப் பார்த்தன் சொன்னான்.

மற்றைப்படி இவனது வாழ்க்கையில் நேர்ந்த ஒரு கொடுந் துயரம் அவன்மகன் அபிமன் பட்டபோதாகும். ஆனால் அத்துயரத்தைக் குறைக்க எத்தனைபேர் அதனைத் தம்மிடையே பகிர்ந்துகொள்ளுகின்றனர்! அபிமன் பட்டவுடன் தேவர்கள், "கந்தனிலும் வலியோனே, யந்தோவந்தோ! அன்னதுவசன் இவற்கு ஆயுளளித்திலனேயந்தோவந்தோ!'' என்றுபுலம்பினராம். பின்னர், தருமன் அக்கொடுமையை மிக இனிமையாக அழுது அரற்றி,

பிறந்ததின முதலாகப் பெற்றெடுத்த
விடலையினும் † பீடும் தேசும்
சிறந்தனையென் றுனைக்கொண்டே தெவ்வரைவென்
றுலகாளச் சிந்தித் தேனே
மறந்தனையோ வெங்களையும் மாலையினால்
வளைப்புண்டு மருவார் போரில்
இறந்தனையோ வென்னுயிரே யென்கண்ணே
அபிமாவின் றென்செய் தாயே.

தேனிருக்கு நறுமலர்த்தார்ச் சிலைவிசயன்
அவனிருக்கத் திண்டோள் வீமன்
தானிருக்க மாநகுல காதேவர்
தாமிருக்கத் தமராய் வந்து
வானிருக்கின் முடிவான மரகதமா
மலையிருக்க வாழ்வா னெண்ணி
யானிருக்க இளஞ்சிங்க மிமைப்பொழுதி
லிறப்பதே யென்னே யென்னே.

உனக்குதவி யொருவரற வொருதனிநின்
றமருடற்றி யொழிந்த மாற்றம்
தனக்குநிகர் தானான தனஞ்சயனும்
கேட்கினுயிர் தரிக்கு மோதான்
எனக்கவனி தரவிருந்த தித்தனையோ
மகனே............

என்று அருச்சுனனைப்பற்றி நினைத்த ஓர் அருமையை நோக்குமின். இதன்பின் வீமனும் புலம்பினான். இவ்வாறு இவர்கள் தங்கள் புலம்பலினால் அச் சோகத்தினைமுழுதும்பகிர்ந்துகொண்டபின் கண்ணபிரான், இந்திரனைக்கொண்டு பிள்ளைச்சோகத் தந்தணைத் தோற்றுவித்தும், அருகினில் இருந்த படைகளை மாற்றியும், அழுகைக்குரல் கேட்கவைத்தும், கடைசியில் மெல்ல மெல்ல உண்மையைக்கூறி அயர்ந்து விழுந்த அவனை ஆகத்தில் பரிவோடேந்தி வெகு பக்குவமாக நடந்துகொண்டார். இவ்வாறுகண்ணனது ஆகத்தில் சார்ந்துகொண்டு, துணைவரும் மற்றெல்லாரும்கேட்டு இரக்குமுறும்படி,

சக்கரம் பிளந்த வாறும்
தரியல ருடைந்த வாறுந்
துக்கர மான கொன்றைத்
தொடையலால் வளைத்த வாறும்
மெய்க்காந் துணிந்த வாறும்
மீண்டுருத் தடர்த்த வாறும்
முக்கா முடனென் முன்னே
யோடிவந் துரைசெய் யாயோ.

* வீமனது கடுஞ்சினத்திற்கும், யாவற்றினும் கொடியதோர் வஞ்சின மேற்கொண்டதற்கும், விசயன் அவ்வளவு கொதிக்காதிருந்ததற்கும்காரணம் வீமனுக்குப்பாஞ்சாலியைத் தவிர்த்து வேறொரு நேசப்பொருள் இல்லாததும், விசயனுக்கு அவளைத்தவிரவேறு காதலியர் இருந்ததுமேயாகும். இடும்பி யென்றொரு மகளைப்பற்றி ஆதி பருவத்திற் கப்பால் நாம் கேள்விப்படுவதில்லை.

† பெற்றெடுத்த விடலையினும் - அருச்சுனனைவிட

பன்னக வாசன் பெற்ற
    பாவைமா மதலை தன்னை
முன்னுற முனையிற் றேற்றேன்
    மூர்க்கனேன் முடியா துண்டோ
உன்னையு மின்று தோற்றேன்
    உன்னுடன் தொடர்ந்து வாரா
தின்னமு மிருந்த தையா
    என்னுயிர்க் கிறுதி யுண்டோ.

மற்புயக் குன்ற மோங்கு
    மைந்தனே மருவ லாரைப்
பொற்புறப் பொருத நீயப்
    பொன்னக ரடைந்த காலை
அற்புதப் படைகள் வல்லாய்
    அபிமனே யமர ரூரும்
கற்பகக் காவுங் வானில்
    கங்கையுங் காட்டி னாரோ.

போரம ருடற்றி நீயப்
    பொன்னக ரடைந்த போதுன்
பேரம ராண்மை கேட்டுப்
    பிதாமக னென்சொன் னானே.

வளைத்தவில் நிமிரா வண்ணம்
    வாளியால் மாவுந் தேரும்
துளைத்துமுன் காலா ளாகத்
    துரோணனைத் துரந்த வீர
திளைத்தவெஞ் சமரி னைந்து
    தனஞ்சயன் சிறுவன் மேனி
இளைத்ததென் றிந்தி ராணி
    இன்னமு தூட்டி னாளோ.

என்றெல்லாம் தன்னுடை மனோபாவங்களை விரித்தும், ஐந்துநாட்களுக்குமுன் னிறந்த நாககன்னியின் புதல்வனை நினைத்துக்கொண்டு தன்மீது இரக்கம் பாராட்டியும் பிரலாபிக்கிற அதிட்டம்நேர்ந்தது. விசுவதுக்கங்களைப் பாடும் மகாகவிகளும் தம்மைச் செவியுறுவோர் சுவையையறிவரோ அல்லரோ என்றஞ்சித் தங்கள் மனோதர்மத்தை வரையறுத்த வளவில்நிறுத்திக்கொண்டு பாடியிருக்க, இவ்விசயன் தன்மீது சுய இரக்கம் கொண்டாடுவதைஅத்தனை மாந்தருமங்குக் கேட்டுநின் றருகினாரெனின், அவனை அதிட்டசாலியென்னுமல் வேறென் கூறுவது. * இவ்வாறு பாடியவுடன், துயரம் தலைக்கேற, அந்தண னுதவிகொண்டு அத்துயரத்தை யிறக்கி, வெஞ்சினமாகவும் வஞ்சினமாகவும் வெளிப்போகவிட்டு, அவ்வஞ்சினம் முற்றுவதற்கேற்ற முயற்சிகளையும் நிறைவேற்றி வைத்தது கண்ணனென்னும் அக்கரிய உருவம். ஆனால் இவைதானோ? இவனது துக்கபபிரலாபங்கள் மாத்திரமேயன்றி, இவன் வில்வலிமைத் தற்புகழ்ச்சிகளையு மன்றோ இவனெதிர் விட்டுநகைக்காமல் பொறுமையுடனவர்கேட்டிக்கொண்டிருந்தார். அக்கண்ணன் மைத்துனன் முறையில் அநேக உதவிகள் செய்வதானான். இத்தனை உதவிகள் செய்து தாங்கப்பெற்றவர் இவ்வுலகத்தில் இல்லை. இஃதெல்லாம் எல்லோருக்கும் வாய்க்கக்கூடிய அதிட்டமா?

வாழ்க்கையிலிவனுக்கு ஒரே இலக்ஷியந்தானுண்டு. பல மாதராது போகமுண்பதன்று அது. ஏனெனின் பல மாதரைப் புணர்வது ஒரு நெறியான ஒரே இலக்ஷியம் என்று சொல்லத்தக்க உண்மைக் காதல் ஆகாதன்றே? பின்என்னெனின், வில்வலியால் தனக்கு நிகர் ஒருவர் இருத்தலாகாதென்னும் வீரலக்ஷியமேயாகும். அவ்விலக்ஷியம் கைகூடுவதற்காகப் பலரும் உதவுகின்றனர். துரோணர் கன்னனுக்குக் கல்விதானமறுத்து, ஏகலைவன் கைவிரலை வாங்கியதுமல்லாமல், போரில் பலதரமும் விசயனது முதன்மைக்குப் பங்கம்நேராமற் பாதுகாக்கலாகின்றார். உதாரணமாகப் பதினன்காம் போரில் கிரீடியைப் போரின்றி வியூகத்தில் விடுகின்றாரன்றோ? மற்று வீடுமனும் விசயனிடத்தில் அன்புமிக்கவனாதலைக் கண்டோம். இருவருக்கும் தாயான அக்குந்தியும், விசயனுக்காக் கன்னனைத் துறப்பாளென்னின் வேறு கூறுவானேன்? இவ்வாறாக இவன் அதிட்டசாலி என்பதைத் தவிர்த்து வேறொன்றும் கூறுவதற்கில்லை. இவனது குணத்தில் பலவகையாக ஆராய்வதற்கு உரிய அரிய பண்புவிசேடங்கள் இல்லை. கன்னன் வீடுமன் முதலியோரைப் போல் விரதம் தாங்கிய கடுமையில்லை; மதிபோழ்தற்கரிய மர்மமில்லை. ஆதலின் இத்துடன் இவனை விட்டு இவனுக்கு மூத்தவனாகிய வீடுமனைச் சிறிது இனி ஆராய்வோம்.

* விசுவதுக்கங்களைப் பாடியகவிஞர்களில் எந்நாட்டுக் கவிகளுக்கும் நிகரானவர் என்று சொல்லத்தக்க ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி (Shelley) தம்மீதுஇரக்கம்பாராட்டிப் பாடியதை 'இது போலித்துயரம்' என்றே கூறினர் சிலர். Byron கவியும் தம்மீது இரக்கம் பாராட்டுவதை 'இது சோகமல்ல போலிச்சோகம்' என்றும் கூறுவார், பலர். இவ்வாறு சுயஇரக்கம்பாராட்டுவதைப் பிறர்கொண்டாடுவதில்லை. ஆயினும்,விசயனதுஅதிட்டம் வேறுவிதமாயிருந்தது.

## நரவாகன தத்த சரிதம்

### iii. மதனமஞ்சுகா லாபம்

உதையணன் முதுமைப் பருவ மடையவே தனது நாட்டினரை அழைத்துநரவாகனதத்தனுக்கு யுவராஜபட்டாபிஷேகம் செய்யப்போவதாகக் கூறினான். அந்தக் காலத்திலே கலிங்கசேனை என்றவொரு தாசி ஒரு சிறு பெண்ணோடு அங்கு வந்திருந்தாள். அரசன் அந்தப் பெண்ணின் வடிவழகைக் கண்டு வாங்கித் தனது மடிமீதிருத்தினான். இச் செய்கையைக் கண்ட நிமித்திகனான ஆதித்தியசருமன் வாய்திறந்து அலறிவிட்டுப் பேசாமலிருந்துவிட்டான். நரவாகனதத்தன் அந்தச் சிறுமியிடம் காதல்கொண்டவனானான். உதையணன் கலிங்கசேனைக்குச் சன்மானஞ்செய் தனுப்பிவிட்டான்.

நரவாகனனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் நடந்தது. அமைச்சருடைய மக்கள் நால்வருக்கும் நரவாகனனிடம்தனித் தனி அலுவல் கொடுக்கப்பட்டது.

உடனே நகர் வலமும் நடந்தது. அந்நகர்வலம் நடந்தது முதல் கோமுகன் மாத்திரம் சிற்சில சமயங்களில் பித்துப் பிடித்தவன்போல் நடப்பதும் சிற்சில வேளைகளிற் காணாமற்போவதுமாக இருந்தான். கேட்பவர்களுக்குக் கோமுகன் தான் உபநிஷத்துக்களைப் படிப்பதாகக் கூறிவந்தான். சிலநாள் சென்றபின் உதையணன் நாகவனத்திற்கு யாத்திரைசெய்ய உத்தேசித்தான். நகரமாந்தர் அனைவரும் உடன் சென்றனர். வழியில் ஒரு தேரில் பல சிறுமிகள் சென்றனர். அவர்களுள் ஒருத்தி அரச குமாரர்களைப் பார்த்து வழிபட்டாள். நரவாகனன் நாட்டு வழக்கங்களை யறியாதவனாகையால் பிற பெண்களாலவமதிக்கப்பட்டான். எனினும் கோமுகன் அவனை அவனறியாதவண்ணம் வந்தனை செய்யும்படி செய்தான். அரச குமாரர்கள் நாகவன மடைந்து பலவித இன்பங்களை யனுபவித்தனர். பின்னர் ஒருநாள் காட்டில் வேட்டையாடச் சென்றனர்.

புளிந்தகர்களை முன் செலுத்தி வேட்டையாடத் தொடங்குகையில், புளிந்தகர் தலைவனான சிங்கசத்துருவைக் கண்டனர். அரச குமாரர்கள் வேட்டையாடுகையில் ஒருவகை மானைக் கண்டு அம்புவிட, விட்ட அம்புகளெல்லாம் அந்த மானை வலஞ்செய்து கொண்டு திரும்பின. இதனைக் கண்டு அதிசயமுற்ற அரசகுமாரர்களிடம் புளிந்தகர் தலைவனான சிம்மசத்துரு, உலகத்திலே வித்தியாதரச் சக்கரவர்த்தி ஒருவன் தோன்றுங் காலத்து இந்த அதிசயம் தோன்றுவது வழக்கமென்று கூறினான். அரசகுமாரர்கள் பலவாறு பொழுதுபோக்குகையில் கோமுகன் பலதொழிலிலும் வல்லவனாகையால் மக்கள் விலங்கு முதலாய பல உருக்களைத் தாமரைத்தண்டில் செய்து ஆற்றில் மிதக்கவிட்டுத் தன் தோழர்களை உவப்புறச் செய்தான்.[1]

இங்ஙனம் இவர்கள் காலத்தைக்கழிக்கையில் மாருபூதிகன் ஆற்றுமணலில் சில அடிச்சுவடுகளைக் கண்டான். அச்செய்தியைத தன்தோழர்களுக்குத் தெரிவித்தான். அந்தச் சுவடுகள் எங்கிருந்துவந்தன என்று ஆலோசித்துக்கொண்டிருக்கையில் கோமுகன் தேர்ந்தெடுத்த ஒற்றன்போல, அந்தச் சுவடுகள் விஞ்சையர் மக்களுள் ஒருவன் விஞ்சைமாதொருத்தியைக் கவர்ந்து செல்லும் அடிகளென்றும், அவர்கள் பக்கத்தே தோன்றும் தோப்பில் இருக்கவேண்டும் என்றும் கூறினான். உடனே அங்குச் சென்று தேடியபோது அவர்கள் காணப்படாவிடினும் ஒரு விஞ்சை மகனுக்கு உரித்தான ஆடையாபரணங்களும் அம்புறுத் தூணியும் காணப்பட்டன. பின்னுந் தேடிப்பார்க்கையில் வித்தியாதரனொருவன் மரமொன்றிற் பிணிக்கப்பட்டு உயிரிழந்திருக்க அரசிளங்குமரர் கண்டனர். யாது செய்வது என்று திகைக்கையில் விஞ்சையனது அம்புறுத் தூணியில் உயிரைக் காப்பாற்றும் மூலிகை யிருப்பது வழக்கமாகையால் அந்த அம்புறுத் தூணியைத் தேடுமாறு நரவாகனன் யுக்தி சொன்னான். தோழர்கள் அம்புறுத்தூணியைத் துருவிப்பார்த்து மூலிகையை எடுத்து அவனது உயிரை மீட்பித்து அவனையும் கட்டவிழ்த்து விட்டனர்.

அந்த விஞ்சையன் தன்பெயர் அமிர்தகதி என்றும் தான் கௌசிகமுனிவருக்கும் பிந்துமதி என்ற அப்சரசுக்கும் பிறந்தவனென்றும் கூறியதோடு தன் பெற்றோரால் கற்பிக்கப்பட்ட விஞ்சைகளால் தான் வித்தியாதரப் பதவி அடைந்ததாகவும் கூறினான். தான் வித்தியாதரனானாலும் வித்தியாதரசக்கரவர்த்தியாவதற்கில்லை யென்பதை யறிந்த அவனது தகப்பன் இனி வரப்போகும் வித்தியாதரச் சக்கரவர்த்திக்குப் பணிவிடைக்காரனாக இருக்க உத்திரவிட்டதாகவும் கூறினான். அவன் சக்கரவர்த்தியை எவ்வாறு தெரிந்துகொள்வேனென்றபோது சக்கரவர்த்தியாக வரப்போகின்றவன் அமிர்தகதி கட்டுண்ட காலத்து அவனது தளையை நீக்கிவிடுவான் என்று தன் தகப்பன் சொன்னதாகவும் கூறினான். அந்த வித்தியாதரச் சக்கரவர்த்தி நரவாகனனெனக் கூறினான். அமிர்தகதி நரவாகனதத்தன் விரும்பும்போது வந்து வேண்டும் உதவிபுரிவதாகவும் கூறி அவனிடம் விடைபெற்றுச் சென்றான்.

அரசிளங்குமரர் வேட்டையினின்றும் திரும்பிவருகையில் நரவாகனதத்தன் பொழுதுபோக்காக மானிடர் செய்தொழில்களைக் குறித்துப் பேச ஆரம்பித்தான். அப்போது கோமுகன் மானிடர் பிரவிருத்திக்கு ஆதாரமாக இருப்பது இச்சை அல்லது விருப்பம் என்றான். இப்பொழுது தாங்கள் கண்ட அமிர்தகதியின் காட்சிக்கு இந்த விருப்பமே காரணமென்பதையும் எடுத்துக் காட்டினான். விருப்பம்தான் மற்றைய செய்கைகட்கு ஆதாரமக இருக்கின்றது என்றும் சொன்னான்

மேலும் அவன் கூறியதாவது:— 'இச்சையினும் மேலானது காம இச்சை. இது காமநூலிற் கண்டபடி நான்கு திறப்படும். தலைவனும் தலைவியும் ஒத்தஅன்புடையாராதல் முதல்வகை. தலைவி காமுறத் தலைவன் விருப்பமின்றி இருத்தல் இரண்டாந் தரத்தது. தலைவன்காமுறத் தலைவி யிச்சையின்றியிருத்தல் மூன்றாவது. தலைவனும் தலைவியும் காமம் என்பது இன்னதென்றறியாதது நான்காந்தரத்தது. இதனில் நான் முதல்வகையைச் சார்ந்தவன். நரவாகனதத்தன் இரண்டாம் வகையினன், மற்றைய இருவரும் நான்காந் தரத்தவ'ரென்றான். தோழர்கள் நரவாகனதத்தனது அன்பிற் குரியாளைக் கூறும்படி கேட்க அவன் அதனைப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினான்.

"யுவராஜஅபிஷேகம் நடந்தபொழுது பத்மாவதி அம்மை ஆதித்தியசருமன் கூறிய விடையொன்றைக் கேட்டு அவன் பேச்சுச் சமர்த்தன் என்று கூறினாள். அவ்வம்மையார் யாது காரணம்பற்றி அவ்வாறு கூறினாள் என்று அவ்வமயம் கேட்க எனக்குத் தோன்றவில்லை. அரண்மனையைவிட்டுவெளியேவந்தபோது அரசனது குதிரைகள் பூட்டிய தேர் ஒன்றிலிருந்த பாகனொருவன் அந்தத் தேரிற் பூட்டிய குதிரைகள் மிக்க வேகமாகச் செல்லக்கூடியனவென்றும் என்னை ஏறிப்

1. உதயணனும் வாழைத்தண்டில் பல உருக்கள் செய்வதில் வல்லவன் என்று பெருங்கதை கூறும்.

பரீட்சை பார்க்கும்படியும் வேண்டினான். நான் அவ்வாறு செல்ல மறுத்தேன். ஆனால் அந்தச் சமயத்திலே வேறு ஒருவன் அவ்விடம் வந்து நகரிலுள்ள கெட்டிக்காரர்களையும் அசடுகளையும் பேர்வழிப்பட்டி குறிக்கும்படி அரசனாணை வந்திருக்கிறதென்றும், நல்ல குதிரைகள் பூட்டியதேரில் ஏறிச்செல்ல மறுப்பவர் அசடுப் பட்டியில் சேர்வர் என்றும் கூறினான். இதனைக்கேட்டவுடனே மறுபேச்சுப் பேசாமல் தேரில் ஏறினேன். தேர் வேகமாகவே சென்றது. பாகன் தான் சமர்த்தர்கள் இருக்கும் வீதி வழியாகச் செல்லப்போவதாகக் கூறினான். தேர் முதலில் ஆவணவீதிவழியே சென்றது. பின்னர் ஒரு நாணயமான சேரியிற் சென்றது. அங்கு இளைஞரும் மடவாரும் பேசிய உரையாடலினின்றும் இது பரத்தையர் சேரி என்று அறிந்தேன். பாகனை வேறு வழியில் தேரைத் திருப்பச் சொல்லியும் அவன் கேட்காமல் விரைவாகச்சென்று ஒரு அழகிய மாளிகையின் முன்புறத்தே நிறுத்தினான். அங்குப்பல மடவார்தோன்றி என்னைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் நானும் தோழர்களும் என்னென்ன செய்கின்றோமென்று பல பல கேள்விகளைக் கேட்டனர். அவைஎல்லாவற்றிற்கும், நாங்கள் கல்வியிலேயே காலம் போக்குகிறோம் என்று விடை பகர்ந்தேன். அவர்கள் எனது வெள்ளறிவைக்கண்டு நகைத்தனர். நான் கூறிய வார்த்தைகளைக் கேட்டு மெச்சிய அந்த மாளிகையின் தலைவி எனக்கு உபசாரம் செய்யும்படி பத்மதேவிகை யென்பவளை நியமித்தாள். மேலும் என்னை அந்த மாளிகைக்கு அடிக்கடி வந்துசெல்லும்படியும் வேண்டிக்கொண்டாள்.

'பத்மதேவிகை எனக்குப் பல உபசாரங்கள் செய்தாள். நான் விடைபெற்றுக் கொள்ளும்போது தன்னிடம் ஒரு இரகசியம் உண்டென்றும் அதனை மற்றொருமுறை கூறுவதாகவும் பின்னரும்வரும்படியும் கூறினாள். அன்றுமுதல் நான் அந்த மாளிகைக்குச் செல்வது வழக்கமாயிற்று. ஆனால் அங்குக் காணுங் காட்சிகளையும், பேசும் வார்த்தைகளையும் பிறரிடம் வெளியிடக் கூடாதென்று என்னை மாளிகைத்தலைவி கேட்டுக்கொண்டிருந்தாள். அதற்குஇணங்கியே நான் அன்றுமுதல் ஒன்றும் வெளியிடுவதில்லை.

ஒரு நாள் நான் அவ்விடம் சென்றபோது பத்மதேவிகை மிக்க துயருடன் காணப்பட்டாள். அதன் காரணத்தை விசாரித்தபோது அங்குள்ளார் எவரும் சொல்ல மறுத்துவிட்டனர். பின்னும் நான்வற்புறுத்தியபொழுது தலைவி தோட்டத்தில் இருப்பதாகவும் அவளையே நேரிற்கண்டு தெரிந்துகொள்ளும்படியாகவும் அங்கிருந்தோர் சொன்னார்கள். நான் அவளைக் கண்டபோது அவள் கோபித்துச் சீறி விழுந்தாள். பிறகு சினந்தணிந்து மத்திரிகாலதிகை என்பவளைக் கண்டு தெரிந்துகொள்ளும்படி கூறினாள்.

'மத்திரிகாலதிகைஎன்பவள் கணிகையர் எண்வகையினராகப் பரதனால் பிரிக்கப்பட்டார்கள் என்றும் அதனில் மாளிகைத் தலைவியான கலிங்கசேனை முதல் வகுப்பினளாவாள் என்றும்கூறினாள். மேலும் கூறியதாவது:-- அவளுக்கு மதனமஞ்சுகை யென்றுபேருடைய பெண்ணொருத்தி உண்டு. ஒரு நாள் கலிங்கசேனையும் மதனமஞ்சிகையும் அரசவைக்குச் சென்றிருந்தபொழுது மதனமஞ்சுகை நரவாகனதத்தனைக் கண்டாள். அதுமுதல் அவனிடத்தில் அன்புடையவளாகித் தானும் அரண்மனைக்குச் செல்ல விரும்பினாள். கலிங்கசேனை தன்னுடைய நிலையில் அரண்மனைக்குச் செல்வது இயலாத காரியம் ஆகும் என்று தன்மகளுக்குப் புத்திகூறினாள். மதனமஞ்சுகையோ விடாப்பிடியாக அதையேநினைத்துக்கொண்டு தன்னைத் தூக்கிலுமிட்டுக்கொண்டு உயிர்விடத் துணிந்தாள். அதனைக் கண்ணுற்ற கலிங்கசேனை அவளை விடுவித்து அவளுடைய மனத்தை அறிந்துகொண்டனள். இச்செய்தியை அரசனது தேவியான பத்மாவதிக்குஅறிவித்தாள். பத்மாவதி இது காரியத்தில் தன்னாலியன்ற உதவி செய்வதாக வாக்களித்தனள். அவள்தான் உன்னை இந்த மாளிகைக்கு வரும்படியான சூழ்ச்சிகள் செய்தவள். ஆதலினால், உனது கெட்டிக்காரத்தனத்தினாலே அரசிளங்குமரனையும் இங்குக் கொண்டு வருதல் தகும். ஆயினும் அரசிளங்குமரன் மதனமஞ்சுகையை விரும்புவானோ என்பது ஐயப்பாடுடையதாக இருக்கின்றது என்றும் மத்திரிகாலதிகை கூறினாள்.

'நரவாகனதத்தனை அழைத்துவருவதாக நான்ஒப்புக்கொண்டேன். அதனாற்றான் நரவாகனனை மதனமஞ்சிகைக்கு வந்தனம் செய்யும்படி செய்தேன். ஆனால் அவன் தான் வந்தனைபுரிந்தவள் மதனமஞ்சுகை யென்று அறியான் என்று கூறினான்'.

இத்துணையும்கேட்டுவந்த நரவாகனதத்தன் மனோதிடங்கொண்டு தான் மதனமஞ்சுகையை அன்று (யுவராஜபட்டாபிஷேகத்தன்று)கண்டதுமுதல்அவளிடம் அன்புடையவனாக இருப்பதாகவும் மறுநாள் நடக்கப்போகும் பரதநாட்டியத்திற்குத் தான் வருவதாகவும் கூறினான்.

மறுநாள் அரங்கில் சுயாமுனதத்தை என்ற கணிகையும் மதனமஞ்சுகையும் வந்து ஆட ஆரம்பித்தனர். ஆனால் கோமுகன் மதனமஞ்சுகை தோற்கும்படியாவும் சுயாமுனதத்தை சன்மானம் பெறும்படியாகவும் சூழ்ச்சி செய்தான்; மதனமஞ்சுகையின் தோல்வியை நரவாகனன் அறியாதவாறு அவன்புத்தியை வேறுவழியிலும்செலுத்தினான். ஆடல்முடிந்த பின்னர்க் கோமுகனை மதனமஞ்சுகையிடம் சென்று தனது விருப்பத்தைத் தெரிவிக்குமாறு நரவாகனன் வேண்டினான். அவன் தான் ஆடலைக்குறித்துச் செய்த சூழ்ச்சிகளை நினைந்து அரசிளங்குமரன் விரும்பியவண்ணம்செய்ய மறுதளித்தான். அரசிளங்குமரன் வற்புறுத்திச் சொல்லவே அவன் தன்னுடன் மாறுபூதிகனையும் அனுப்பவேண்டு மென்று கேட்டுக்கொண்டான். இவர்கள் இருவரும் கணிகையர் வீடடைந்தபொழுது நல்வரவேற்கப்படவில்லை. அதனைக் கோமுகன் நன்கறிவான் ஆயினும், தான் அவ்வாறுசெய்ததற்குப் பலகாரணங்கள் உளவென எடுத்துக்காட்டியதோடு நரவாகனன் மதனமஞ்சுகையை விரும்புகிறான் என்றுங் கூறினான். கலிங்கசேனை உண்மையில் மகிழ்ச்சிகொண்டனளாயினும் இது அரசகாரியமென அஞ்சி அமைச்சன் உருமண்ணுவாவினி

டம் இச்செய்தியைத் தெரிவித்தாள். அவன் அதனை உதையணனுக்குக்கூற, உதையணனும் ஒருவாறு சம்மதித்தான். மதனமஞ்சுகை தன் அன்புக்கு உரியவளாவாள் என்று நரவாகனன் அறிந்தான்.

நரவாகனன் இவ்வாறு தான் விரும்பிய பொருள் கிடைக்குமென்று அறிந்தானேனும், அவளோடு எவ்வாறு பழகுவது என்பதை அறியான். எவ்வாறு மடவாரோடு பழகவேண்டுமென்று அப்பொழுதுதான் அவன் தெரிந்துகொண்டான். மதனமஞ்சுகையும் நரவாகனனும் நாகவனத்தில் யாத்திரை முடியுமட்டும் தங்கியிருந்தனர்.

கௌசாம்பிக்குத் திரும்ப ஏற்பாடாயிற்று. ஒரு நாட்பயணஞ் சென்றதும் மதனமஞ்சுகை வருத்தமுடையவளாகக் காணப்பட்டாள். கோமுகன் அவளை அவளுடைய விசாரத்தைக் குறித்து விசாரித்தபோது நரவாகனன் காசியரசன் புதல்வியை மணக்கப் போவதாகவும், தான் அவ்வாறு அவனை மணந்து கொண்டு வாழ்வது இயலாத காரியம் என அறிவதால் நஞ்சருந்தி உயிர்விடத் துணிந்திருப்பதாகவும் கூறினாள். இதனையறிந்த நரவாகனனும் அவள் உயிர் விட்டால் தானும் கூட இறப்பதாகக் கூறினான். அப்பொழுது கோமுகன் காணப்படவில்லை. தேடிக்கண்டு பிடித்தபோது உயிர் உடலைவிட்டு நீங்காது பலநாள் உயிருடனிருக்கும் உபாயத்தைத் தேடிக்கொண்டிருப்பதாகவும் அதனால் அவ்விடம் தான் வர இயலாதென்றும் அவன் சொல்லிவிட்டான். தோழரும் மற்றுமுள்ளோரும் கோமுகனிடம் சினங்கொண்டனராயினும் அவர்கள் செய்துகொள்ளக்கூடியது ஒன்றுமில்லை. முடிவாக இவர்கள் மூவரும் தபந்தகனைக்கொண்டு இச்செய்திகளையெல்லாம் அரசனுக்கு அறிவிப்பதென்று ஏற்பாடு செய்தனர். ஆனால் தபந்தகன் உதையணனிடம் இச் செய்தியைக் கூறத் துணியவில்லை. எல்லோரும் திரும்பக் கௌசாம்பியை அடைந்தனர்.

(தொடரும்)

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[213-வது பக்கத் தொடர்ச்சி]

### தாரைக் கிதுவுந் தகவாமோ!

**மா**ருதி மருங்கின் வரத் துணிவதன்முன், தகவுடைத்தாரையின் தனிப்பெரும் மேன்மைவாய்ந்த நன்மொழிகளால் இலக்குவன் சீற்றந்தணிந்த தன்மை சாலவும் சிறப்பித் துரைக்க உரியதேயாம். கோபங்கொள்ளுதல் குணத்தின் குறைவையே காட்டுமென்பது உண்மையே. ஆயினும் இலக்குவன் கொண்ட இச்சீற்றம் தன்பொருட்டு விளைந்தது அன்றாதலின், செம்மைசேர் சீற்றமாகி அவனை நமக்கு அதிகமும் அருமையனாக்குகின்றது. விழிநீர் வழியநின்றவளாகித் தன் தனயனை இராமனுடன் கானம்சென்று அடியாரின் ஏவல்செய்யும்படி போக்கிய அவ்வெண்ணரியபெருங் குணத்துத்தமி சுமித்திரையின் மொழிமறாமல், இலக்குவன் ஒழுகுகின்றானாதலின், இராமனது அடியானாகிய இவன் 'தீதுசெய்யான், செய்தானேல் அதுவும் நன்றாம்.'' சீற்றங்கொள்வது தீமையாகலாம், ஆயினுமிவ் விளையவள்ளலைப்போன்று, தனக்கிழைத்த தீங்கின்பொருட்டாகவல்லாமல், பிறர்பிறர்க்குச் செய்த தீங்கிற்காற்றாமல் கதிக்கின்றசீற்றமெல்லாம் சீரியதாகிவிடுகின்றதாதலின், இவன் சீறிய செய்கை தீதாகாமல் பெரியோர்மொழியை மெய்ப்பித்துவிட்டதென்றே எண்ணல்வேண்டும். இவன்செய்தது தீது ஆயினும் தீதன்றாயினும், அதுகிடக்க, இவனது சீற்றம் நன்றேயாயிற்று என்பதில் ஐயமில்லை. இவன் சீற்றங்கொண்டதாலன்றோ, அதனைத் தணிக்குமாறு தாரை மீண்டுங் களத்தினுள் வரநேர்கின்றாள்; அக்கற்பின் நற்பெரும் படிவத்தாளை, நவையறு குணத்தினாளை, உன்னவுன்னவுயர்கின்ற உத்தமியை, மீண்டுநாம் கண்டு உய்யும்படி காட்டுமாறு கம்பருக்குச் செவ்வியளித்தது இச்சீற்றமே. இலக்குவனது வெகுளியையே கிழியாகவைத்ததனில், தம் கலையெனும் அமுதத்தில், சொல்லெனும்கோல்தோய்த்துத் தாரையின் இச்சித்திரத்தைத் தீட்டி அதனை நம் மன அரங்கில் தம் நாடகப்புலமையால் இயக்கவும் இயக்குகின்றார் இக் கம்பர்.

இலக்குவன் சீற்றத்தைப் பின் நிறுத்தித் தாரை முன்னாக விளங்குகின்றனள். அங்கதனோடு அனுமனும் தாரையின்முன் நண்ணிக் குறையிரந்து நின்றபோது அவளிடத்தும் வெகுளி தோன்றியது. அதுவுமிலக்குவன் செய்தியேபோல், பிறர் பிறர்க்கு இழைத்ததாம்பிழைபற்றி எழுந்தவொருவெகுளியேயாம். இவ்வளவில் தாரையின் தன்மையும் இலக்குவன் தன்மையும் ஒக்குமேனும், இத்தாரையின் மேன்மை விஞ்சித்தோன்றுவதற்கு உரியதாக அமைந்துள்ளது இச்செவ்வி. இலக்குவனது சீரிய சீற்றத்தைத் தணிக்குமா வந்தனள் இத்தாரை. அதுவுந் தன்பொருட்டன்று. பிறர் பிறர்மேல் கொண்டிருந்த கோபத்தைக் குளிர்விக்கும் குணமுடையது இவள் காரியம். இராமனுக்குத் தீதிழைத்தானென்ற காரணத்தால் சுக்கிரீவன்பால் கோபங்கொண்டவன் இலக்குவன். அக்காரணம்பற்றியே தாரையும் அச்சுக்கிரீவனை வெகுண்டுளாள். ஆயினும் இன்னவள் அன்னவன்றன் கடுஞ்சினத்தை ஆற்றவந்து முயல்கின்றாள். இதனிற்கிடையில், தன் தனிப்பெருங் கணவன் காதல்வாலியைக் கொன்றவனும் அவ்விராகவன், கொல்வித்தவனும் இச்சுக்கிரீவன் ஆக, இவ்விருவருந் தனக்கு இழைத்துள்ள பொல்லாங்கை இச்சமயம் நினையாமல், அவர்களுக்கிடையே சந்துசெய்யத்தலைப்பட்டாளென்றால், இவ்வானரகுலத் துத்தமி தாரை, தகவுடையோர் சிந்தையிலும் சென்னியிலும் வீற்றிருக்கும் சீர்த்தியள் ஆவது அருமையன்று.

இத்துணை மேன்மையும் சிறப்பும் அத்தாரைக்கு வாய்த்ததென்னின், அது கம்பர்தம் கலைமலிந்த புலமையின் வண்மையேயாம். ஏனெனில் இவள் வடமொழியில் இப்பெயருடனே முதற்பிறவி யெடுத்திருந்தபோது, வான்மீக முனிவரால் நன்கு மதிக்கப்பெற்றிலள். வெறுப்புடைய தோற்றமும், வாய்கயப்புறம் வழக்கும் உடையளாய், குரங்குகளுக்கேனும் அடுக்காவகை மானமும் மதியும் இழந்து அவ்வட

நூலின்கண் அவள் உலாவுகின்றாள். அக் கோலாகலத்தை நோக்கியபின் அதனயல் கம்பர்தம் சித்திரத்தின் நுட்பம் பின்னரும் இனிது விளங்கும். இனி வருவது வான்மீகம்:—

அதன்பின் லக்ஷ்மணர், வெள்ளிய மதிலினால் சூழப்பட்டதும், வெல்லற்கரியதும், தேவேந்திரன் மாளிகைபோன்றதும், கைலாச முடிபோன்ற வெள்ளிய பிராசாதசிகரங்களையுடையதும், இந்திரனால் கொடுக்கப்பட்ட, நீலமேகம் போன்றனவாகிய, வேண்டியவற்றைத் தரவல்ல, குளிர்ந்த நிழலையுடைய, அழகிய மலர் மரங்களையுடையதும், ஆயுதபாணிகளாகிய வலிய வானரர்களாற் காக்கப்பட்ட வாயிலையுடையதும், திவ்விய மாலைகள் புனையப்பட்டதும், பொற்றோரணங்கள்நாட்டப்பட்டதுமாகிய சுக்கிரீவனுடைய அழகிய மாளிகைக்குள், மேகமண்டலத்துள் சூரியன் புகுமாறுபோல, புகுந்தார். அவர் பல சனங்கள் நிறைந்துள்ள எழுகட்டுக்களையுங் கடந்துசென்று,பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட கட்டில்களும் சிறந்த ஆசனங்களு மிடப்பட்டு, இடங்கடோறும் விலையுயர்ந்த கம்பலங்கள் விரிக்கப்பட்டு விளங்கும் மறைவான பெரிய அந்தப்புரத்தைக் கண்டார். அங்கே பிரவேசித்தவுடனே அவ ரினியசுரத்தையுடைய நரப்புக்கருவியோடு பயின்றபாடலாடல்களைக் கேட்டனர். தங்கள் வடிவழகுகளால செருக்குற்று, உயர்ந்த ஆபரணங்களணிந்து, சித்திரமாலைபுனைந்து, அதிக கவனமாய் மாலைகட்டிக்கொண்டிருந்த நற்குலத்திற் பிறந்த பல மங்கையர்களையும், நல்லாடையுடுத்து, நல்லுணவுண்டு கவலையின்றித்திரிந்த சுக்கிரீவனுடைய அடிமைகளையும் அவர் கண்டார். அங்கே நூபுரத்தினுடைய ஓசையையும் காஞ்சியின்ஆரவாரிப்பையுங் கேட்டு இலக்ஷ்மணர் வெட்கமடைந்து, பின்பு அதிக கோபங்கொண்டு, திசைகளெல்லாம் ஒலிமண்டும்படியாக வில்லைக் குணத்தொனிசெய்துவிட்டு, அந்தப்புரத்தினுள் நுழைந்து என்செய்தேனென்று எண்ணி, இராமருடைய சோகத்தை நினைத்துத் துக்கமடைந்து, ஒரேகாந்தஸ்தானத்திற்போய் நின்றார். அப்போது வானராதிபனாகிய சுக்கிரீவன், லக்ஷ்மணர் செய்த குணத்தொனியினால், அவருடைய வரவை யறிந்து, பயங்கொண்டு, ஆசனத்திலிருந்தபடியே நடுங்கி 'அங்கதன் முன்சொல்லியபடி அண்ணன் மாட்டன்புள்ள லக்ஷ்மணர் உண்மையாகவேவந்துவிட்டார் போலும்' என்று நினைத்தான். லக்ஷ்மணருடைய வரவை முன் அங்கதன் சொல்லக்கேட்டுப் பின் அவர்செய்தகுணத்தொனியினால் தெளிந்த சுக்கிரீவன் முகம்வாடி, மனமஞ்சி, அழகிய தாரையை நோக்கி "மாதே, சுபாவத்தில் இளகிய மனத்தையுடையவராகிய லக்ஷ்மணர்கோபங்கொண்டு வருதற்குக் காரணமென்ன? அவருடைய கோபத்திற்கு இடம் யாது என்று நீ அறிவாயா? ஒரு காரணமுமில்லாமல் அவர் கோபங்கொள்ளார். நான் அவருக்குச் சிறிதாவது குற்றஞ்செய்திருக்கிறேனாவென்று நீ நன்காராய்ந்து எனக்குஅதனைச்சீக்கிரஞ் சொல்லு; அல்லதுநீயேநேரே போய்அவரைக்கண்டு பேசி நல்லவார்த்தைகளால் அவர் கோபத்தைத் தணி. உன்னைப் பார்த்து அந்தச் சுத்தாத்துமா கோபங்கொள்ளமாட்டார். பெரியவர்கள் பெண்களுக்கு ஒருகாலும் தீங்குசெய்ய மாட்டார்கள். உன்னால் கோபந்தணிந்து மனந்தெளிந்தபின் அந்தக் கமலக்கண்ணனை நான்காண்கின்றேன்" என்று இதமாககூறினான்.

அழகிய தாரை கள்ளுண்ட மயக்கத்தால் கால்கள் தள்ளாட, கண்கள்சுழல, இடையிலணிந்த காஞ்சிக் கோவையும் பொன்னாணும் நழுவ, உடல் வளைய, லக்ஷ்மணருக்கு முன்னே போயினாள். வானரவேந்தன் பத்தினியாகிய தாரையை லக்ஷ்மணர் கண்டு, கோபத்தைத் துறந்து, தலைகுனிந்து, ஒதுங்கிநின்றார். தாரை லக்ஷ்மணருடைய அருணோக்கத்தைப் பெற்று, கள்ளுண்ட மயக்கால் நாண்துறந்து "கோமானே, உமது கோபத்திற்குக் காரணம்யாது? உமது கட்டளைப்படி நடவாதவர் யார்? உலர்ந்த காட்டை நோக்கி வருகின்ற தாவாக்கினியைக்கண்டு மனக்கவற்சியின்றி இருப்பவன் யாவன்?" என்று அவருடைய கோபத்தைத் தணிக்குமாறு அன்பான வார்த்தைகள் கூறினாள்.

தாரை கூறிய சாந்தமுடையதும் அச்சமில்லாததுமான வார்த்தையை லக்ஷ்மணர் கேட்டுத் தமது அன்பினை நன்றாகக் காட்டவேண்டி அவளை நோக்கி "கணவனுக்கு நன்மைசெய்பவளே, உன்னுடைய நாயகன் காமவின்பத்தில் ஈடுபட்டு, அறம்பொருள்களை ஈட்டாது கழிகின்றதை நீ காணவில்லையா? அவன் தன் இராச்சியத்தின் நன்மையையும் துன்பத்தால் மீதூரப்பட்ட எங்களையும் சிறிதும் எண்ணாது தனது மந்திரிமார் முதலிய பரிவாரங்களுடன் கள்ளுண்டு களிக்கின்றானே! அவன் நான்கு மாசங் கழித்து வருவேனென்று எங்களுக்குப் பிரதிக்கினைசெய்துவிட்டுக் களியாட்டில் மனம் வைத்தவனாய் அந் நான்கு மாசமுங் கழிந்ததை அறியாமலிருக்கின்றானே! அறம்பொருள்களையடைவதற்குக் கள்ளுண்டல் காரணமென்று சொல்லப்படவில்லை; கள்ளுண்டலினால் அறமும் பொருளும் இன்பமும் அழிந்துவிடும். செய்ந்நன்றிகொன்றவன் அறத்தை இழந்துவிடுவான்; தக்கவர் நட்பை இழந்தவன் பொருளை இழந்துவிடுவான். உண்மை யறமுடையாரோடுசெய்த நட்புப் பொருளின்பங்களிற் சிறந்தது; அப்படிப்பட்டநட்பை இழப்பவன் பொருளின்பங்களையு மிழந்தவனே; அவன் அறத்தையுமிழவாது போவதில்லை. இப்படி அவன் தனது நட்பினரை இழந்துபோவதாயிருக்கிற காரியத்தில் எம்மால் செய்யத்தக்கது யாது? காரியங்களை யெல்லாமறிந்த நீயே அதைச் சொல்லக்கடவை" என்றார்.

இவ்வாறு லக்ஷ்மணர் கூறிய, அறம் பொருள் பொறையோடு பயின்ற, இனிய வார்த்தையைத் தாரை கேட்டு, அவரைநோக்கி "கோவிளங்குமர, இது கோபித்தற்குத் தக்ககாலம் அன்று; அன்றி உற்றாரிடத்தில் கோபஞ்செய்வது தக்கதுமன்று. வீர, உமது நன்மையை விரும்பினவன் செய்த குற்றத்தைப் பொறுத்தல் உமது கடன். கோமக, நற்குணங்களால் நிறைந்தவன் குணமில்லாதவனிடத்தில் கோபங்கொள்வதெப்படி? உம்மைப்போலச் சத்துவகுணமுடையவர்களாய்த் தவத்திற்குப் பிறப்பிடமானவர்கள் கோபமடைவார்களா? அரிக்குலத் தலைவனது நண்பரின் கோபத்தை நான் அறிவேன்; அவரது காரியத்தில் காலவிளம்பன மானதையும் அறிவேன்; நீங்கள் எங்களுக்குச் செய்த நன்றியையும் அறிவேன்; நாங்கள் அதற்கு யாது கைம்மாறு செய்யவேண்டுமென்பதையும் அறிவேன். மக்களுட் சிறந்தாய், காமனுடையவலி கடத்தற் கரியதென்பதையும் அறிவேன்; அந்தக்காமனால் சுக்கிரீவன் யாரிடத்தில்ஈடுபட்டுச் செயலற்று இருக்கின்றானென்பதையும் அறிவேன். நீர் இவ்வாறு கோபமடைந் திருக்கின்றமையின் நுமது புத்தி காம தந்திரத்திற் செல்லவில்லை: காமவேட்கையுற்றவன் காலதேசங்களையாவது அறம்பொருள்களையாவது அறியான். என்னருகி லிருக்கின்றமையால் காமமுற்று அதனால் நாணிழந்திருக்கின்ற உமது பிராதாவாகிய அரிக்குலத் தலைவனைப் பொறுத்தருளும். தர்மத்திலும் தவத்திலும் பற்றுவைத்த முனிவர்களும் காமவின்பத்தை விரும்பி மோகமடைவார்களாயின் இயல்பாகவே திண்மையில்லாத குரக்கினத்தவனாகிய சுக்கிரீவன் காமவின்பத்தி லழுந்தாதிருப்பது எவ்வண்ணம்?" என்றுவிசுவாசம் பிறக்கும்படியாகப் பொருள்பொதிந்தசொற்களைச் சொல்லிவிட்டு, பெயர்த்தும்தனது நாயகன்பொருட்டாக லக்ஷ்மணரை நோக்கி "நரோத்தம, சுக்கிரீவன் காமமுற்றிருந்தானாயினும் முன்னரே தங்கள் காரியத்தை முடிப்பதில் முயற்சி செய்யும்படி கட்டளையிட்டிருக்கின்றனன். பல மலைகளிலும் வசிக்கின்ற மகா பலமுள்ள வானரர்கள்

நினைத்த உருவமெடுக்க வல்லவர்கள், நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் கோடிக்கணக்காகவும் வந்திருக்கின்றார்கள். தடந்தோளா, நீர் ஒழுக்கத்தில் தவறினவரல்லர்; நல்லோர்கள் சிநேகத்தன்மையினாலே பிறர் மனைவியரைக் காணுவது குற்றமாகாது; ஆகையால் உள்ளே வாரும்" என்று கூறினாள். இவ்வாறு தாரையா லழைக்கப்பட்டலக்ஷ்மணர் தாம்வந்த காரியத்தைச் சீக்கிரம்முடிக்க வேண்டுமென்று அந்தப்புரத்தினுள் பிரவேசித்து, அங்கே தேவேந்திரனைப்போல் வெல்லற்கரிய புகழ்படைத்த சுக்கிரீவன், விலையுயர்ந்த கம்பலம் விரிக்கப்பட்ட ஒரு அழகிய பொன்னாசனத்தின் மேலே, திவ்வியாபரணம் அணிந்து, திவ்விய மாலை புனைந்து திவ்விய வஸ்திரம் தரித்து, ஆபரணாலங்கிரதராகிய பெண்கள் சூழ ஆதித்தன்போல் வீற்றிருக்கக்கண்டார். பொன்னிறமுடைய சுக்கிரீவன் சிறந்தவாசனத்திலிருந்து, தன்மனைவியாகிய உருமையை இறுகத் தழுவிக்கொண்டு வீரமுள்ள லக்ஷ்மணர் வருவதைக் கண்டான்.

கள்ளின் வேகம் கண்களை மயக்கக் காமக் கயமை வாய்வழுக்க, வாலியை வீழ்த்தி அவன் வஞ்சகத் தம்பியின் முயக்கைத் தனக்களித்த நன்றியைப் பாராட்டி முழங்கும் இத்தாரையின் மூர்க்கம், மனிதர் வாய்கிடக்க ஒரு குரங்கின்வாலிற்கும் குறைவையே கொண்டுசெய்யும். மற்று, கம்பர்நூலினுள் மொழி மாத்திரம் அன்றி அவள் தலையெழுத்தும் வேறாக மாறுகின்றது.

# ஒத்தெல்லோ

## ["Shakespeare's —"Othello"]

அங்கம் 2. களம் 1.

[231-வது பக்கத் தொடர்ச்சி]

ஒத்தெல்லோ சில ஏவலாளர்களுடன் வருகிறான்.

ஒத்தேல்லோ:—ஆ, செவ்விய என் சமராட்டி[1]!

டேஸ்டிமோனா:—எனது அருமை ஒத்தெல்லோ!

ஒத்தெல்:—என் முன்னே உன்னை இங்கு யான் காண, திருப்பதியினளவு பெரிய அதிசயமும் அடைகின்றேன்[2]. ஆ, எனது ஆன்மாவின் உவகையே[3]! கடுங்காற்றெவ்வொன்றின்பிறகும் இவ்வகை அமைதியே வருமாயின், சாவையே எழுப்பியாகும்வரைக் காற்றெல்லாம் வீசட்டும்; உழைக்குங் கப்பல், கடல்களின் குன்றுகளை ஒலிம்பஸ் உயரம் ஏறி மீண்டும் விண்ணின்று நரகம் தாழ்ந்துள்ள அளவு பாய்ந் தாழ்ந்து மூழ்கட்டும்[4]! இப்பொழுது இறப்பதானால் அதுவே இணையில்லா இன்புற்று இருப்பதாம்[5]; ஏனெனின் அறியப்படா விதியில் இதற்கிணையான மற்றோர் சுகம் தொடர்தற்கியலாவகை என் ஆன்மா தன் திருப்தியைப்பூரணமாயடைந்திருக்கின்றதென அஞ்சுகின்றேன்[6].

டேஸ்டி:—விண்ணோர் விலக்குக[7]! நம் நாட்கள் வளர்கின்றவாங்கே, நமது அன்பும் இன்பமும் பெருகட்டும்.

ஒத்தே:—அன்னவாறே ஆகுக, இனிய தேவதைகாள்! என் திருப்தியை நான் போதுமளவு பேச இயலவில்லை; இங்கு என்னை அடைக்கின்றது அது[8]; அளவிற்குவிஞ்சிய ஆனந்தம் அது: இதுவேஇதுவே,

(1) சமராட்டி - போர்செய்பவள். வீட்டில் விட்டிற்பூச்சிபோல் கிடக்காமல் தன்னுடன் போர்க்களம் விழைந்து வந்தாளாதலின், ஒத்தெல்லோ அவளை, 'சமராட்டி' என்று விளையாட்டாக அழைக்கின்றான்.

(2) வெனிஸ்நகரைவிட்டு நான் புறப்பட்டபிறகு நீ புறப்பட்டாயானாலும், எனக்குமுன் நீ இங்கு வந்துசேர்ந்திருப்பது எனக்கு அதிக சந்தோஷத்தை விளைவிப்பதுடன் அதிசயமாகவும் இருக்கின்றது.

(3) என்று பாராட்டி டெஸ்டிமோனாவைத் தழுவிக்கொள்கின்றான்போலும்.

(4) காற்றடித்து ஓய்ந்தபின் அக்காற்றின் கடுமையினளவு ஆழ்ந்த அமைதியும தோன்றும் என்று கூறுவார். இதனின்று, அல்லல்பட்டவர் அமைதியும் அடைவார் என்றுபொருள்படும்படி, "கடுங்காற்று ஒவ்வொன்றிற்கும் பின்னும் ஓர் அமைதியுளது" என்றவோர் பழமொழி ஆங்கிலத்தில் வழங்குவதுண்டு. ஒத்தெல்லோ இங்கு அப்பழமொழியைத் தழுவிப் பேசுகின்றான். "நாம் கடுங்காற்றில் அகப்பட்டு மிகக் கலங்கினோம்; இப்பொழுது நாம் இருவரும்இனிது சந்திக்கின்ற இவ்வமைதி நமக்கு வாய்த்தது. இத்தகைய இனிமையும் நல்ல உவகையுமே, கடுங்காற்று அடித்தபோதெல்லாந் தொடர்ந்து அமையுமானால், வேண்டியமட்டும் காற்றும் வீசிக் கடலுங் கொந்தளிக்கட்டும்; அத்துணையும் நல்லதே—என்பது இதன் கருத்து.

சாவையே......வீசட்டும் = சாவு என்பது இங்கு, செத்தவர்களைக் குறித்து நிற்கின்றது. இறந்து கிடப்பவரும் கிடக்கமாட்டாமல் எழுந்திருக்கும்படி காற்று அடிக்கட்டும்—என்பது பொருள்.

உழைக்கும்......மூழ்கட்டும் = கடலில் அலைப்புண்ட கப்பல் உயர உயர ஏறி ஆழ ஆழத் தாழட்டும்—என்பது பொருள்.

கடல்களின் குன்றுகள் = கடலின் மலைபோன்ற அலைகள். ஒலிம்பஸ், என்பது கிரீஸ் தேயத்திலுள்ள ஒரு மிக உயரமான மலையின் பெயர். ஆகாயத்திற்கும் பாதாளத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கின்றதோ அவ்வளவு தூரம் கப்பலானது உயர்ந்து வீழட்டும்.

(5) அடையக்கூடிய இன்பத்தின் எல்லையை நாம் அடைந்துநிற்கின்றோம்; ஆதலின் இப்பொழுதே இறந்துவிட்டால், முதிர்ந்த இன்பத்திலேயே நிலைநின்றவர்களாவோம். ஏனெனில், இதன்பின் நமக்கு யாது நேருமோ, யாரறிவார்—என்பது பொருள்.

இன்பத்தின் எல்லையை எய்தினவர், இதனோடு தாம் இறத்தலே இனிது என்று எண்ணும் இயற்கையை ஒத்தெல்லோவின் இவ்வாசகம் காட்டுவதுடன், வரநிற்கும் தீமையைக்குறிக்கும்வாய்ச்சொல்லாகவும்அமைகின்றது.

(6) எனது இன்பம் ஸம்பூரணமாயிருத்தலால், இதன்மேல் அடைவதற்கு இடமில்லை. விதியின்படி வருவதற்கு இருப்பதை முன்தெரிந்துகொள்ள இயலாதாகையால், அறியப்படா விதி, என்கின்றான். ஒத்தெல்லோ, ஆற்றல் மிகுந்த வீரனேனும் விதியில் நம்பிக்கை வைப்பவன். இயாகோ போன்றவர்தாம் அனைத்தையும் தம் மதியாற் சாதித்துவிடலாமென்னும் அகங்காரம் உடையவர்களாக இருப்பார்.

எந்நாளும் நம் இதயங்கள் புரிகின்ற பிணக்கங்களாயிருக்கட்டும் [9].

[அவளுக்கு முத்தமிடுகின்றான்]

இயாகோ:—(ஒரு புறமாய்) ஆஹா, இப்பொழுது நீவிர் செவ்விதின் சுருதி சேர்ந்திருக்கின்றீர்; எனினும், உத்தமனே நானாக, இவ்விசையைச் செய்கின்ற ஆணியைத் தளர்த்திவிடுவேன் [10].

ஒத்தே:—வாருங்கள், நாம் அரண்மனைக்குப் போவோம். செய்தி[11], நண்பர்காள், நமது போர்கள் முடிந்தன, துருக்கர் முழுகிப் போயினர். இத் தீவின்கண் உள்ள எனது பழைய நண்பர்கள் எங்ஙனம் இருக்கின்றனர்? தேனே, இந்த ஸைப்ரஸ்ஸில் நீ நன்கு விரும்பப்படுவாய்[12]. இவர்களுக்குக் கிடையே யான் அதிக அன்புகண் டடைந்துளேன். ஆஹா என் இனியாய், முறைமைகடந்து பிதற்றி, நான் எனது சுகங்களையே நச்சியவனாயிருக்கின்றேன் [13]. நல்லவென் இயகோ, நின்னை வேண்டிக்கொள்கின்றேன், கடற்கரைக்குச் சென்று, எனது பெட்டிகளை இறக்கி, மீகாமனைக் கோட்டைக்கு அழைத்துக்கொண்டு வா; நல்ல மனிதன் அவன், அவனது யோக்கியதை மிகுந்த மரியாதையை வற்புறுத்திக் கேட்கின்றது[14]. வா, டெஸ்டிமோனா; மீண்டும் நாம் இந்த ஸைப்ரஸில் இனிது சந்தித்தோம்.

(7) இவ்வின்பத்திற்கு இடையூறொன்றும் வாராமல் தெய்வங்கள் விலக்குவாராக—என்பது பொருள்.

(8) இன்னமும் எனது திருப்தியின் இன்பத்தைஎடுத்துப் பேசலாமென்றாலோ, என்னால் இயலவில்லையே. அளவிற்கு விஞ்சிய இவ்வானந்தம் என் தொண்டையை அடைக்கின்றது— என்று தன் கழுத்தைப் பிடித்துக் காட்டுகின்றான் போலும்.

(9) இதுவே, இதுவே, என்று ஒவ்வொருமுறைசொல்லும்போதும் ஒரு முத்தமிடுகின்றான், என்று கொள்ள வேண்டும். பிணக்கம்=விரோதம். முத்தமிடுவது அன்பினது இணக்கத்திற்கு அடையாளம். இம்முத்தம் இடுவதன்றித் தமக்கிடையே வேறு விரோதம் நேரவேண்டா என்பது, எள்ளளவும் மனவேறுபாடின்றி முழு ஒற்றுமையுடன் தாம்வாழவேண்டுமென்னும் தூய விருப்பத்தைக் காட்டுவதாம். பின்னே விளையநிற்கின்ற கொடுமையைக் கருதுங்கால், இவ்வாசகம் மிகவும் இரங்குதற் குரியதாயமைகின்றது.

(10) ஆணி=இசைக் கருவிகளின் நரம்பை இறுக்குவதற்கு அமைந்த முறுக்காணி (பிரடை). ஆணியைத் தளர்த்தினால், முன் கூடியிருந்த சுருதி கெட்டுப்போய் விடும். "நீங்கள் இப்பொழுது இசைந்திருக்கின்றீர்; எனினும் நானே அதனை விரைவிற் சிதைத்துவிடுகின்றேன், பாருங்கள்"—என்பது பொருள்.

உத்தமனே நான் ஆக—ஒத்தெல்லோமுதல் எல்லோருந் தன்னை, உத்தமன் என்றும் யோக்கியன் என்றும் கருதி யழைப்பதை இகழ்ந்து பரிகசிக்கின்றான். "மிக்க யோக்கியன்போல் என்னை எல்லாரும் மதித்திருக்க நான் இக்கெடுதியைச் செய்துவிடுவேன்"—என்பது கருத்து.

(11) செய்தி=செய்தியொன்றுஉளது கேளுங்கள், என்று சேர்த்து முடித்துக்கொள்ள வேண்டும்.

(12) தேனே, என்று டெஸ்டிமோனாவை அருமையாக அழைத்து, 'உன்னை, இத்தீவில் உள்ளவர்கள் நன்கு விரும்பி ஏற்றுக்கொள்வார்' என்று கூறுகின்றான்.

(13) என்னுடைய சுகத்தையும் இன்பத்தையும் பற்றிச் சிந்தித்தவனாக இருக்கின்றேனேயொழிய, ஏனையோரை நினைக்காமல் இருக்கின்றனே, இது முறைமையன்று—என்பது பொருள்.

(14) மரியாதைக்குரியவன்—என்பது பொருள்.

# கம்பர் சிருட்டியில் பிறந்த கற்பினாள்

[237-வது பக்கத் தொடர்ச்சி]

கம்பநாட்டடிகள் ஸ்ரீராமபக்தியில் நிறைந்தவராதலால் பெருமானுடைய திருவடியையோ திருவடித்துகளையோ குறைத்துக் கூறமாட்டார். வேண்டுழி வைபவத்தையும் புகலாமலும் போகமாட்டார். ஈண்டு அகலிகை வரலாற்றில் சக்ரவர்த்தித் திருமகனாரது திருவடித் திருத்துகள்வைபவந்தான் போற்றற் குரியது. எங்ஙனமென்னின் கௌதமர் 'கல்லியலாதி' என்ற உடனே அகலிகை கருங்கலாய் மருங்கு வீழ்ந்தாள். சாபவிமோசனம் "தசரதராம னென்பான் கழற்றுகள்கதுவ இந்தக் கல்லுருத் தவிர்தி" என்றுதந்தார். அதன்படியே "கண்ட கன்மிசை காகுத்தன் கழற்றுகள் கதுவ.......... பண்டை வண்ணமாய்நின்றன" ளென்று கம்பர் அழகாகச் சொல்லிவைத்திருக்கிறார். இத்தகைய மேற்கோள்களுடன் நிர்ணயிப்பதோடு அனுபவத்திலேயும் திருவடிப் பெருமையைத் தெரிவிப்பான் வேண்டிக் கோசிகர் வாயிலாக ஓசை நயமும் பொருட்பொலிவும், பக்திச்சுவையும் செறிந்தபாடலொன்றுகம்பரால்அருளப்பட்டிருக்கிறது. அதாவது

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர்
துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கிப் போரில்
மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன்
கால்வண்ண மிங்குக் கண்டேன்

என்பது. இவ்வாறு அகலிகை சாபவிமோசனத்தால் மழைவண்ணத் தண்ணலின் கால்வண்ணத்தில் பக்தி மிகுந்த விசுவாமித்திரரும் 'கால்வண்ண மிங்குக் கண்டேன்'' என்றுஈடுபடுகிறார். இவ்வாறு ஈடுபட்டமனம் அதிலேயே ஊறிக்கொண்டிருத்தலினாலே குலமுறைகிளத்துபடலத்தில் விசுவாமித்திரர்ஜனகரிடம் "கோதமன்றன் பன்னிக்கு முன்னையுருக் கொடுத்ததிவன் போது நின்றதெனப் பொலிந்த பொலங்கழற்கால் பொடிகண்டாய்'' என்று கழற்கால்பொடியில் ஈடுபடுகிறார். இந்தப் பெருமையைக் கேட்டுக்கொண்டிருந்த மிதிலா நகர மாதர் ஸ்ரீராமபிரான் பவனி வரும்போது உலாவியற் படலத்தில்,

அரத்தமுண் டனைய மேனி
யகலிகைக் களித்த தாளும்
விரைக்கருங் குழலிக் காக
வில்லிற நிமிர்ந்து வீங்கும்
வரைத்தடந் தோளுங் காண
மறுகினில் வீழு மாதர்
இரைத்துவந் தமிழ்தின் மொய்க்கு
மீயின மென்ன லானார்

ஈயினமென்ன மொய்த்த மிதிலைமாதர்கள், அகலிகைக் களித்த தாளென்று அத்திருவடியில்ஈடுபடுகிறார்கள். இதைக் கேள்வியால் உணர்ந்திருந்த சொல்லின் செல்வனான சிறியதிருவடி ஸ்ரீராமபிரான் முன்வந்து சொல்லாலே கல்லாதகலையும் வேதக்கடலுமே என்னும் காட்சிதோன்றும்படிபேசி, சுக்ரீவனை யழைத்து

வருவதாய்ச் சென்று ஸ்ரீராமபிரானுடைய வரலாறு சுக்ரீவனுக்குச் சொல்லிக்கொண்டு வரும்போது,

“வேலிகற் சினவுதா டகைவிளிந் துருளவிற்
கோலியக் கொடுமையாள் புதல்வரைக் கொன்றுதன்
காலியற் பொடியினா னெடியகற் படிவமாம்
ஆலிகைக் கரியபே ருருவளித் தருளினான்.”

என்று கூறுகின்றார். அஞ்சனையின் புதல்வன் மிதிலா நகர மாதரைக்காட்டிலும் ஒருபடி உயர்ந்து அஞ்சன வண்ணத்தான்றன் திருவடிப் பொடியில் ஈடுபடுகிறார். இவைகளையெல்லாம் கேட்டிருந்த வில்லிபுத்தூரார் ஹிருதயம் விகசிக்கப்பட்டுப் பன்னிரண்டாம்போர்ச் சருக்கத்துக் கடவுள்வணக்கத்தில்,

“பொய்யாத தவமுனிபின் போயருளித்தாடகைதன்
மெய்யாவ நிகரென்ன வெஞ்சரத்தா லழுத்தியபின்
மையாழி முகில்வண்ணன் வாங்கியன பூங்கமலக்
கையாலு மொருசாபம் காலாலு மொருசாபம்.”

என்று நயம்படக் “கையாலு மொருசாபம் காலாலு மொருசாபம்” வாங்கியதில் ஈடுபடுகின்றார். (கையால் ஒரு சாபம் வாங்குதல் சிவன்வில்லை முறித்தல், காலாலொருசாபம் வாங்குதல் அகலிகை சாபவிமோசனம். வாங்குதல் = வளைத்தல், நீக்குதல், என்று இரு பொருள்.) ஆக இன்னவாறெல்லாம் அகலிகை சாபவிமோசனம் செய்த திருவடியில் பல ஈடுபாடுகளிருத்தலால் ஸ்ரீராமபிரானுடைய திருவடியும் திருவடித்துகளும் அகலிகை சாபவிமோசனம் செய்வதற்குக் காரணமாயிருந்ததில்லை, அகலிகை தானே எழுந்திருந்தாளென்று நிர்ணயம் செய்ய இயலாது. ஆயினும், அகலிகையின்கற்பின் ஏற்றம் கூறுவதற்குக் ‘கதுவாமுன்னம்’ என்றதற்கு வேறுபொருள் கொண்டு இவ்வளவும் சொல்லலாம்படி யிருக்கிறதென்று குறிப்பான் வேண்டிக் கூறினோம்.

இவ்வாறு அகலிகையின் கற்பைச் சிறப்பித்துக் கூறிய விசுவாமித்திரர் “நிரந்தரமுலகில் நிற்கும் நெடும்பழி பூண்டாள் நின்றாள்” என்று உண்மைக் கௌதமரைக் கண்டவுடனே அகலிகை நிற்கும் நிலையைச் சொல்லுகின்றார். உலகம் இந்நிகழ்ச்சியின் சூக்ஷ்மம் அறியாமல் செய்த செயலைக்கொண்டே குற்றம் கூறிவிடுமாதலால் அவ்வுண்மையைத் தெரிவிப்பதற்கே “நெடும்பழி செய்தாள் நின்றாள்” என்னாமல் “நெடும்பழி பூண்டாள் நின்றாள்” என்கிறார். பூணுதலாவது அணிந்துகொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல், எனப்படும். மாரீசனிடம் வந்து தன் தங்கைக்கு ஏற்பட்ட அவமானத்தைக் கூறி, இராமன்மனைவியை வஞ்சித்துக் கொணரும் உபாயத்திற்கு உதவி செய்யும்படி இராவணன் வேண்டியபோது, இவன் சொன்ன சொற்களின் குறிப்பால் சீதையின் அழகைக் கேட்டு மதியிழந்தானாய் அதை மறைத்துத் தன் தங்கைக்கு நேர்ந்த அவமானத்தைக் காட்டி ஈடாகச் செய்யவேண்டுமென்று சொல்லுகின்றான் என்பதை நன்கு அறிந்து கொண்டமாரீசன் அவன் கருத்தைமறப்பான் வேண்டி “அந்தரமுற்றான் அகலிகை பொற்பா லழிவுற்றான்- இந்திரனைப்பார் எத்தனையோர்தா மிழிபுற்றார்” என்றுகூறுகின்றான். அகலிகையின் அழகைநச்சி இந்திரனே அழிந்தான், என்னும் இக்கருத்தை அவ்வரக்கன் மறுக்கவுமில்லை. இந்திரன் அகலிகையின் அழகினால் மதிமயங்கித் தீய ஒழுக்கத்தை மேற்கொண்டு இழிவடைந்தான் என்பதை இராவணன் நன்கு இதனாலறிந்திருந்தும், இலங்கையில் அசோக வனத்தில் பிராட்டியினிடம்

அந்தர முணாரின் மேனாள்
அகலிகை யென்பாள் காதல்
இந்திர னூரத்தை நல்கி
யெய்தினா ளிழுக்குற் றாளோ.

என்று கூறுகின்றான். தான் நினைத்த தீயகாரியம்பலித்தற்கேற்ற உவமை காட்டுவான் வேண்டியே “அகலிகையென்பாள் காதல் இந்திரனூரத்தை நல்கி யெய்தினாள்” என்று ‘பேயும் தனக்கேற்றபடி திரித்துப் புராணம் பாடும்’ என்பதேபோல் அகலிகை வரலாற்றை மாற்றி உளறலாகின்றான். இதைக் கேட்ட பிராட்டியின் உள்ளம் துடித்தே யிருக்கும். ஏன்! ‘அகலிகையின் உள்ளமும் உண்மையும் அறியாமல் பழி கூறுகின்றானே இப்படுபாவி, இதை மறுத்து நாம் ஏதேனும் உண்மை கூறுவோமாயினும் இவனோ ஏற்றுக் கொள்ளான்; தவிர இதன் மூலமாய் இவனிடம் பல பேசவேண்டி நேர்கிறது; ஆதலால் இத்துஷ்டனிடம் நாம் பேசாதிருத்தலே நலம்’ என அதை மறக்காமலே விட்டிட்டார். இராவணனைப் போன்ற தீயவர் புகலும் பழிமொழியை மனத்தில் வைத்துக்கொண்டே கம்பர் விசுவாமித்திரர் வாயிலாக ‘நெடும் பழி பூண்டாள் நின்றாள்’ என்று கூறினார்.

இப்படியே உலகப் போக்கில் கௌதமரும் “விலைமகள் அனைய நீயும் கல்லியலாதி’ என்றார். அகலிகையின் உள்ளத்தைக் கௌதமர் அறிந்திருந்த போதிலும் உலகம் பழிக்குமே என்ற பொம்மலால் ‘விலைமகள் அனைய நீ’ என்றனர். கௌதமருடைய உள்ளமறிந்தவர்களுக்கு அச்சொல் வேறு பொருளும் தருகின்றது. அதாவது விலைமகள் பொருளினிடத்தே உள்ளமும் புணருவோனிடத்தே உடலுமாக இருப்பாளாதலால், அவ்வாறே அகலிகை உண்மைக் கௌதமரிடத்தே உள்ளமும் போலிக் கௌதமரிடத்தே உடலுமாயிருந்ததுபற்றி இவ்வுண்மையினை யறிந்த பொய்யிலா உள்ளத்தான் ‘விலைமகள் அனையநீ’ என விளம்பினான்.

இன்ன பிறவற்றால் விசுவாமித்திரரும் கௌதமரும் அகலிகை கற்புடையவளென்றே கருதினார்களெனத் தமிழ்நாட்டார் அறியுமாறு புதுக்கித்தந்த கம்பர்தம் கருத்தை எவ்வாறு முடிக்கின்றார் என்பதையும் காண்போம்.

இரண்டு மகருஷிகள் கருத்தைக் காட்டிலும் ஒருபடிஉயர்ந்து அகலிகைகற்புடையாள்மாத்திரமன்றித் தெய்வப் பெண்ணுமாவாள் என்று விளக்குவான் வேண்டி அகலிகை வரலாற்றின் தோற்றுவாயிலேயே கம்பர் தம் கருத்தாக

கண்ட கன்மிசை காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கற வேறுபட் டுருவங்
கொண்டு மெய்யுணர் வவன்கழல் கூடிய தொப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனள் ”

என்று கூறுகின்றார். ஸ்ரீராமபிரான் வெட்டவெளியில் ஒரு கருங்கல்லைப் பார்த்தான். அதனருகே செல்லுங்கால் தன் திருவடித்துகள் அதன்மீது பட்ட காரணமாய் அதனின்றும் அப்போது ‘அறிவைக் கெடுத்த அஞ்ஞானமாகிற மயக்கம் நீங்க உருவம் வேறுபட்டு மெய்யுணர்வு கொண்டு (ஜீவன்)இறைவன் திருவடியடைந்ததேபோல் பழையவண்ணமாக அகலிகை நின்றாள்’ என்று விளக்குகின்றார். இப்போதிருக்கும் அகலிகையின் வண்ணம் ‘பண்டை வண்ணம்’ இடையில் நேர்ந்தது ‘உண்டபேதைமை மயக்கு’; அதுவும் அற்று உருவம் வேறுபட்டு மெய்யுணர்வு கொண்டு அவன் கழல் ஒரு ஜீவன் கூடியதேபோலப் பரிசுத்தையாயினாள். இப்போதிருக்கும் இத் தூய நிலை பண்டை வண்ணம்தான்; இடையில் தன்மீதுபடிந்த மாசினைத் துடைப்பதற்கே இறைவன் திருவடித்துகள்ஓர் வியாஜமாயிற்று. ஆகையால் அவள் என்றும் இயற்கையில் கற்பிற் சிறந்து தூயவளாகவே இருக்கின்றாள் என்பதை இப்பாசுரம் தெளிவாக்குகின்றது. மேலும் கம்பர் உவமை தருவதிலேயும் பாத்திரங்களுக்கு ஏற்றவாறு தந்தமைக்கும் திறத்தினர். மிதிலையில் ஸ்ரீராமபிரானைக் கண்ட பிராட்டியின் காதல் பரவியதைக் குறிப்பிடும்போது “பாலுறு பிறையெனப்பரந்ததெங்குமே” என்றனர். அக் கம்பரே சூர்ப்பணகையின் காதல் பெருகியதைக் குறிப்பிடுங்கால் “வழிந்தநாகத்தின் வன்றொளைவாளெயிற்றிழிந்த கார்விடமேறுவ

"தென்னவே" காமக்கடுங்கனல்மூண்டதென்று கூறுவார். பால் பிறைபரவியதால் கிடைக்கும் பயன் வெண்ணெயும் நெய்யுமான அமிர்தப் பொருளாகும். விடமேறுவதாற் பயன் துன்புறுவதாகும். இதனால் அவ்வவர் நிலைமைக்கேற்றவாறு பயன்தரும் உவமை அமைக்கும்செவ்வியோர்கம்பராதலால்,ஈண்டு அகலிகைக்கு உவமை, முமுக்ஷுவைக் காட்டுவதால் கம்பர் அகலிகையின்கண் வைத்துள்ள மதிப்பு நன்கு போதரும்.

இவ்விடயத்தையே கம்பர் 'அகலிகைப் படலத்தின்' ஈற்றுப்பாட்டினில் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றார். அதாவது ஸ்ரீஇராம லக்ஷ்மண விசுவாமித்ரர் மூவரும் கௌதமர்பால்சென்று விசுவாமித்ரரால் அகலிகையில் குற்றமின்மை சொல்லக்கேட்ட கௌதமர் அன்னவாறே ஏற்றுக்கொண்டபின்னர்,

குணங்களா லுயர்ந்த வள்ளல்
  கோதமன் கமலத் தாள்கள்
வணங்கினன் வலங்கொண் டேத்தி
  மாசறு கற்பின் மிக்க
அணங்கினை யவன்கை யீந்தாண்
  டருந்தவ னோடும் வாச
மணங்கிளர் சோலை நீங்கி
  மணிதற் கிடக்கைக் கண்டார்

என்று நடந்தவற்றையும், கம்பர் தம் கருத்தையும் குறிக்கின்றார்.

குணங்களால்சிறந்தவனை ஸ்ரீராமபிரான் கௌதமருடைய திருவடிகளைவணங்கினான்,வலம்வந்தான், துதித்தான்.'மாசறு கற்பின்மிக்க அணங்கினைஅவன் கையீந்தான்'' என்கிறார். அதாவது குற்றமற்ற கற்பிற் சிறந்த தெய்வப்பெண்ணாகிய அகலிகையைக் கௌதமர்கையில் ஸ்ரீராமபிரான் தந்தார்என்கிறார். கௌதமர்தம் கொள்கைகளை ஊன்றி நோக்கிய சில குறிப்புக்களால் அகலிகை 'கற்புடையாளானாள்'. விசுவாமித்திரர் குறிப்பாலும் "நெஞ்சினாற் பிழைப்பிலாள் .........முன்னை வண்ணத்தளாகி நின்றாள்'' என்று வெளிப்படையான சொற்களினாலும் 'கற்பின் மிக்கவள்' ஆனாள். அன்னவளே கம்பரால் 'கற்பின் மிக்க அணங்கானாள்'.இத்தகைப் பெருமை வாய்ந்த தெய்வக்கற்பினளை 'மாசறு' என்ற அடமொழிசேர்த்து 'மாசறு கற்பின் மிக்க அணங்கு' என்கின்றார். அவ்வணங்குக்கு மாசு ஒன்றிருந்ததாயும் அது அற்றதாயும் கூறுகிறார். உண்மை நோக்காது உலகம் கூறும பழியே மாசாமாதலின் அப்பழியும் இன்று நம்மால் நீங்கிற்று என்பார். 'மாசறு கற்பின் மிக்க அணங்கு' என்கின்றார். வால்மீகியைப் போலன்றி'' அந்தர முனரின் மேனாள் அகலிகை யென்பாள் காதல் இந்திரனாரத்தை நல்கி எய்தினாள் இழுக்குற்றாளோ.? என்றுபின் பிராட்டியிடம் இராவணன் கூறியசொற்களை போன்ற மாசும் தம்மால் சொல்லப்படும் அகலிகைபால் அற்று விடுவதால் அவள் "மாசறு கற்பின் மிக்க அணங்கு'' ஆயினாள்.இத்தீயசொற்களை ஒட்டி,குணத்தை உள்ளடக்கிக்குற்றம்போன்று கூறும்"நெடும்பழி பூண்டாள் நின்றாள்'' என்ற விசுவாமித்திரர் வாக்கையும் "விலைமகள் அனையநீ'' என்ற கௌதமர் வாக்கையும் நிரசிக்கவேண்டிக் கம்பர் தாம் தம் கருத்தாகக் கூறுமிடத்து "மாசறு கற்பின் மிக்க அணங்கு' என்றே சித்தாந்தம் பண்ணிவைத்தார். இம்மாசு அவளுக்கு ஏற்பட்டது தன் கணவனாலேயே என்று நாம் நினைக்குமாறு ஆரம்பத்திலேயே கம்பர் "மனையின் மாட்சியை அழித்திழி மாதவன் பன்னி'' என்கின்றார். அதாவது மனைவியினுடைய பெருமையையெல்லாம் அழித்தவனான கௌதமருடைய பத்னி என்கிறார். நெஞ்சினாற்பிழைப்பில்லாமல் குற்றத்தின் வாய்ப்பட்ட தன் மனைவியை உலகம் அறியாமல் ஒருவாறு தண்டித்திருப்பானானால் அவளைப்பற்றி உலகம் பழிகூறவே இயன்றிராது. அவ்வாறு செய்யாமையினால் 'மனையின் மாட்சியை அழித்திழி மாதவ'னாகிறான். மற்றும் இத்தொடர்மொழிக்கு மற்றோர் சிறப்புப் பொருளும் தோன்றும். அதாவது:— 'தன் இல்வாழ்க்கைப் பெருமைக்கு முன்னே மற்றவர் இல்வாழ்க்கைப் பெருமை யெல்லாம் அழிதது அச்சிறிப்பியலிலே இறங்கினவளானமாதவனுடைய பத்னி அகலிகை, என்னும் பொருளாம். எதுபோலவெனின்,மின்சாரவிளக்கின் வெளிச்சமும்கூடச் சூரியனுக்குமுன் துலங்காததுபோலவே அகலிகையின் இல்வாழ்க்கை மாட்சிமைக்கு முன்னே மற்றவர் இல்வாழ்க்கை மாட்சிமை அழிக்கப்பட்டதாகிறது. இக்கருத்துப்படவே உயுத்த காண்டத்தில் மீட்சிப் படலத்தில் பிராட்டியின் கற்பை உலகம் அறிய அவாக்கொண்ட ஸ்ரீராமபிரான் பிராட்டியைக் கடிந்துரைப்பதேபோல் கற்பின் ஏற்றந்தோன்றும் பொருள் உட்கிடையாக வைத்துச்சொல்லும் பாசுரங்களில்ஒன்று

"பெண்மையும் பெருமையும் பிறப்பும் கற்பெனும்
திண்மையும் ஒழுக்கமும் தெளிவும் சீர்மையும்
உண்மையும் நீயெனும் ஒருத்தி தோன்றலால்
வண்மையின் மன்னவன் புகழின் மாய்ந்ததே''

என்று கூறுகின்றார். அதாவது 'தானம் வழங்காத அரசன் புகழ் அழிவதேபோல் பெண்மை, பெருமை, பிறப்பு, கற்பு, ஒழுக்கம், தெளிவு, சீர்மை, உண்மை இவைகளெல்லாம் நீ ஒருத்திபிறந்து உன்குணப் பெருமைக்கு முன்னே அவைகளெல்லாம் அழிந்துபோயின' என்று ஓர் சிறப்புப் பொருளும், இந்நற்பண்புகளெல்லாம் நீ ஒருத்தி பிறந்ததால் அழிந்தன ஆதலால் அத்தகைய தீயவளென்று மற்றோர் இழிபொருளும் தோன்றுமாறு கூறியதேபோல், உலகத்தார் பழிப்புக்கேற்றபடி இல்வாழ்க்கையின் பெருமையை, அழித்து இழிவடைந்தவளான மகருஷியினுடைய மனைவி என்று ஓர்பொருளுடையதாகவும், உண்மை துலங்கும்படி தன் இல்வாழ்க்கைப் பெருமைக்கு முன்னே மற்றவர் இல்வாழ்க்கைப் பெருமையெல்லாம் அழித்து அச்சிறப்பிலே இறங்கினவளான மாதவனுடையபத்னி என்ற மற்றோர்பொருளுடையதாகவும், "மனையின் மாட்சியை அழித்திழி மாதவன் பன்னி'' என்று முன்னர்க் கூறிவைத்து அவள் கற்பில் ஐயமும் தோன்றாதவாறு தன் கருத்தாக ஈற்றில்"மாசறு கற்பின் மிக்க அணங்கு'' என்று விளங்கவைத்தார். இங்ஙனம் ஒவ்வொருவராலேயும் படிப்படியாக ஏற்றம் பெற்றுக் கம்பரால் தெய்வமாக்கப்பட்டவன் ஸ்ரீராமபிரானால் என்னாகின்றாள் என்பதையும் சற்றுக் கவனிப்போம்.

---

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

7-ம் பத்து, 6-ம் தசகம்.

[233-வது பக்கத் தொடர்ச்சி]

1-ம் பாசுரம்.

பாமரு மூவுலகும் படைத்த பற்ப நாபாவோ
பாமரு மூவுலக மளந்த பற்ப பாதாவோ
தாமரைக் கண்ணாவோ தனியேன் றனியா ளாவோ
தாமரைக் கையாவோ வுன்னை என்றுகொல் சேர்வ
[துவோ

பதக் குறிப்புக்கள்:—பாமரு மூவுலகம்–பா - பொருள்கள், மரு எங்கும் பூரணமாகநிறைந்திருக்கின்ற, மூவுலகம் - முதலடியில் கிருதம் அகிருதம் கிருதா

கிருதம் என்னும் ஆதி சிர்ஷ்டியில் படைக்கப்பெற்ற உலகங்களும், இரண்டாமடியில்பூலோகம் புவர்லோகம், சுவர்லோகமும் குறிக்கப்படுகின்றன. இரண்டாமடியில் திருவடிகளா லளந்ததைக் குறிப்பதால் இம்மூன்று உலகங்கள் அந்வயம். முதலடியில் ஆதிசிருஷ்டியைக்குறிப்பிடுவதால் ஆதிசிருஷ்டியிலடங்கியஉலக விதானத்தைக் குறித்தல்உசிதம். இதில் உலகப்படைப்பு ஸம்பந்தத்தைப் பகவானின் உந்திப் பிரமனை வன் முதலில் உற்பத்தி செய்து உலகங்களைச் சிருஷ்டித்தபடியால் உந்தியமலரைப் "பத்மம்"போல் வர்ணிக்கிறபடி. இரண்டாவதில், திருப்பாதங்களின்பத்மம் வர்ணிக்கப்படுகிறது. மூன்றாவதடியில்திருக்கண்களாகிய தாமரைப்புஷ்பங்களிலீடுபடுகின்றார். இதன்பிறகு திருஹஸ்தங்கள், தாமரைகள், இந்தப்பத்மங்களெல்லாம் ஆழ்வார் ஸாக்ஷாத்கரிக்கையில் அவர் திருக்கண்களுக்குத் தைக்க இப்போழ்து ஸாக்ஷாத்காரமாவது தன் பிருக்கிருதி ஸம்பந்தத்தால் ஸதா ஸர்வ காலமும் தனக்குத் தோன்றவில்லையே, தேஹ ஸம்பந்தத்தைப் பகவான் தவிர்த்துத் தம் திருவடிச் சோதிக்குக் கூப்பிட்டுக்கொண்டால் அல்லவோ எப்போழ்தும் ஸேவித்துக் களிப்படையலாமென்ற நினைவு தூண்ட ஆழ்வார் முதலடியில் அவனின் பரமோதார சுபாவத்தால் சிருஷ்டியாதிகளைச் செய்த அன்பையும் இரண்டாமடியில் எல்லாவருக்கும் தன் திருவடிகளைக் காண்பித்து அதுவே சேருமிடமென்றும் சேர வுபாயமென்றும் காட்டியருளியசீலத்தையும், 3 வது அடியில்"தனியேன் தனியாளாவோ" ஆள்பவன்- ஆண்டவன் -மஹாபாபங்களை யியற்றி உன்னைவிட்டு அகன்றிருக்க வசப்பட்டவனை எனக்கு நீ அல்லது ஒரு கதி கிடையாமலிருக்க, உன்னை என்றுகொல் சேர்வதுவோ என இழவெல்லாம் தீர்ந்து எப்போழ்தும் உன்னிடம்நின்றுசேர்ந்து அநுபவிப்பதுஎன்று ஆழ்வார் இப்பாசுரத்தில் 'ஓ' 'ஓ'வென்று பலபிரகாரமாய்ப் பகவானைக் கூப்பிடுகிறார்.

---

2-ம் பாசுரம்

என்றுகொல் சேர்வதந்தோ வரனுன்முக
னேத்துஞ் செய்ய
நின்றிருப் பாதத்தை யானிலநீ
ரெரிகால் விண்ணுயி
ரென்றிவை தான்முதலாய முற்றுமாய்
நின்ற வெந்தாயோ
குன்றெடுத் தாநிரை மேய்த்தவை
காத்தவெங் கூத்தாவோ.

அவதாரிகை:-சென்றபாசுரத்தில் பகவானைக் கூப்பிட்டு,நான்என்று உன் திருப்பாதம் சேர்வது என்று விண்ணப்பம் செய்ததுபோல் இதனிலும் அப்படியே பிரார்த்திக்கிறார்.

பதக் குறிப்புக்கள்:—அரன் நான்முகன் ஏத்தும் செய்யபாதம்—ருத்திரனும் பிரம்மாவும்கூடத் துதி செய்பவனே. பசுமேய்த்து மலைதூக்கி அவைகளை மழைகாதது நிர்ஹேதுகமாய்ச் செய்த நன்மையை எடுத்துக் காட்டுகிறார். நிலநீர்...எல்லா சேதனசேதந வஸ்துக்களுக்கும் அந்தராத்ம பூதனே; உயிர் -சேதநாரூபமான பிராணிகள்; கூத்தாவோ -பசுக்களையும் கோபாலர்களையும்மலையைத் தூக்கிக் கண்ணன் ரக்ஷித்தது அவனுக்கு ஒரு விளையாட்டு விநோத லீலையென்பது திருவுள்ளம்.

3-ம் பாசுரம்

காத்தவெங் கூத்தாவோ மலையேந்திக்
கன்மாரி தன்னைப்
பூத்தண் துழாய்முடியாய் புனைகொன்றை
யஞ்செஞ் சடையாய்
வாய்த்தவென் னான்முகனே வந்தென்
னாருயிர் நீயானால்
எத்தருங் கீர்த்தியினா யுன்னை
யெங்குத் தலைப்பெய் வேனே.

குறிப்பு:—இப்பாசுரத்திலும் கோவர்த்தன மலையைத்தூக்கிக் கோபாலர்களையும் கோக்களையும் காப்பாற்றினதை எடுத்துரைப்பதால்அந்தத்திவ்யசேஷ்டிதத்தில் ஆழ்வார் மனம் தாழ்ந்து அதைக் காணல் வேண்டுமென்ற அபேக்ஷையை ஸாதிக்கக் கூடாமையை யறிந்தும் ஆசை தூண்ட அது "எங்குத் தலைப்பெய்வேன்" அஸம்பாவிதமே என்று மனவேதனைப்படுகின்றார். உரை:-பூத்தண் துழாய் முடியாய் - சிரஸிலே துளபத்தைத்தரிப்பவனே; கொன்றைப்பூவை முடியில் புனைந்த சிவந்த ஜடாதாரியான ருத்திரபகவானே (இவருக்கு அந்தராத்ம பூதனாயிருப்பவனே) வாய்த்த என் நான்முகனே - எனக்கு ஆதாரமாக மஹாவிஷ்ணுவுக்குப் புத்திரனாய் வாய்த்த பாக்கியம் பெற்றவனே, எத்தருங் கீர்த்தியினாய் - எவ்வளவோ கல்லியாணகுணங்கள்நிறைந்தவனாதலால் அவைகளை முழுவதுமெடுத்துத் துதிசெய்யச் சாத்தியமாகாதென்று கூறினபடி - "நீ" வந்து என் ஆருயிர் ஆனால்" - நீயேஎனக்குக்காப்பாற்றும்நிர்வாஹகன் ஆனபோது என்னால் செய்யத் தக்கது யாதுளது-ஆகையால் நான் உன்னைக் காணமாட்டேன் உன்னினருளே வேண்டுமென்று அபேக்ஷை.

---

4-ம் பாசுரம்.

எங்குத் தலைப்பெய்வனா னெழின்மூ வுலகு நீயே
அங்குயர் முக்கட்பிரான் பிரம்ம பெருமானவன்நீ
வெங்கதிர் வச்சிரக்கை யிந்திரன் முதலாத் தெய்வநீ
கொங்கலர் தண்ணந் துழாய்முடி யென்னுடைக்
[கோவலனே.

அவதாரிகை:—முன் பாசுரத்திலேயே பிரம்மன் பரமசிவன் இவர்கள் முதலானவர்களுக்கு ஸ்திதி ஸத்துச் சுவரூபாதிகள் பகவானின் அதீநமென்று சொல்லியாயிருக்க இங்கும் அச்செய்திகளைச் சொல்வது புனருக்தியாகாதோ வென்ன - இப்பாசுரத்திற்கு இலக்கு:-முக்கண் பிரபுவுக்கு - அங்கு - எல்லா உலகங்களிலும், உயர்வு - ஏற்பட்டுள்ள சிரேஷ்டம், அவன் - பிரஸித்தன், பிரம்மபிரான் - பிரம்மம் - பெருமை வாய்ந்ததெய்வமென்ற மஹிமை நான்முகனுக்கு உண்டானதும், வெங்கதிர்-அதி உஷ்ணமான சிகையுடைய, வச்சிரம் - மேகங்களை மழைக்காகஓச்சி உலகஹிதத்தைநாடியும் அரக்கர்களைச்சிக்ஷித்தும் காக்கும் வல்லமைஇந்திரனுக்கு வச்சிராயுதத்தால் உண்டானதும் தன்னுடைய நன்கொடையல்லவோ என வற்புறுத்தல் நிமித்தம். ஏற்கனவே தக்கவர்களுக்கும் கூட உதவுகிறவன், அசக்தனாய் உன்னைத்தவிர வேறு பற்றுக்கோடு இல்லாத எனக்கு என்னுடைய பிரதிபந்தங்களைப் போக்கி அடியேனை உன் திருவடிகளில் சேர்ப்பிக்கவேண்டுமென்று இப்பாசுரத்தில் பிரார்த்திக்கிறபடி.

---

# சூரியன்

[239-வது பக்கத் தொடர்ச்சி]

## V. சூரிய குடும்பம்

### 3. பூமி.

நான்மறைக்குலம் இரவியின் மண்டல நாப்பண்
மான்முதற்பொருள் நிலயமென் றிசைக்குமிவ் வாய்மை
தான்முதற்றெறி கிற்பவ ளாதலிற் றரைமான்
வானிலத்தனைச் சுற்றியுஞ் சுற்றும்வான் மணியை.

—புவியேழுபது 42.

நடுவிடம்:–நாம் வசிக்கும் நிலவுலகும், சூரிய குடும்பத்தைச் சேர்ந்ததொரு கோளமாகும். சூரியனைப் பற்றிய ஆராய்ச்சிக்கும், மற்ற அண்டங்களை ஆய்ந்தறிவதற்கும், இப்பூமியே, ஆதாரமாயிருக்கிறது. நாம் அசையாது இருந்த இடத்தேயிருக்க, நம்மைச் சுற்றிச் சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்கள் முதலிய யாவும் ஓடுவதைக் கண்டு களிக்கின்றோம். இவ் வெளித்தோற்றத்தைக் கண்ட பலர், பூமி அசையாதிருக்க, சூரியன் முதலியவையே இதனைச் சுற்றி வருகின்றன என முன்னே கருதினர். இப்போதோ, இவ்வம்மையாரை இவ்வாறு நடு வீட்டில் வைத்து வழிபடுவார் இல்லை; நடுத்தெருவில் சூரியனைச் சுற்றியலைவோரில் ஒருவராகவே விட்டுவிட்டனர். இந்த உண்மையை எடுத்துச் சில நூற்று ஆண்டுகளுக்கு முன் வற்புறுத்திய வானசாஸ்திரியைச் சிறையில் அடைத்தனர்,அக்காலத்தினர். இது நடந்தது மேனாட்டிலே.நம் நாட்டினர் அந்தப்பாவத்திற்குப் போகவில்லை. இரணியாக்கன் பூமியைப் பாயைப்போலச் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டான்என்று புராணங்கள்புனைந்துரையாகக் கூறினாலும்,நம் நாட்டு வான சாஸ்திரிகள், பூமி உருண்டை வடிவினதே யென்றும், அது தன்னைத்தானேயும் சூரியனையும் சுற்றி வருகின்றதென்றும், கூறியுள்ளார்கள். கி. பி. 6-ம் நூற்றாண்டிலேயே, வராகமிச்ரர் தமது பஞ்ச சித்தாந்திகையில் இவ்வாறு எழுதி வைத்துள்ளார்.

தூரம்:—நமது பூமி, சூரியனிலிருந்து 92,700,000 கல் தூரத்தில் இருக்கின்றது. ஏறக்குறைய ஒன்பது கோடியே முப்பதுலக்ஷம் கல் என்று சொல்லிவிடலாம். இதனை எட்டு எண்களில் எழுதிவிடுகிறோம். அந்த அளவைச் சிறிது மனதால் எண்ணிப் பார்க்க வேண்டும். சென்னை நகரிலிருந்து புறப்பட்டுப் பூமியைச் சுற்றி வந்து, சென்னைக்குச் சேரவேண்டுமானால், 25,00 கல் தூரம் யாத்திரை செய்யவேண்டும். நான்கு முறை பூமியைச் சுற்றுவதென்றால், லக்ஷம் கல் தொலைவாகும். நாற்பதுமுறை சுற்றுவதென்றால், பத்துலக்ஷம் கல் தொலைவாகும். நானூறு முறை சுற்றுவதென்றால், கோடி கல் தொலைவாகும். மூவாயிரத்து எழுநூற்று இருபது முறை சுற்றுவதென்றால் தான், ஒன்பதுகோடியே முப்பது லக்ஷம் கல் தொலைவாகும். இதுவே பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம். எனவே, பல ஆண்டுகள் வாழ்ந்து, பூமியை 3,000 முறை சுற்றினாலும்,இவ்வளவுதூரம், யாத்திரை பண்ணமுடியாது; அதற்கும் மேற்பட்டு இருக்கின்றது இந்தத்தூரத்தின் அளவு. நம்முடைய புகைவண்டி விரைவாகச் செல்லும்போது, மணிக்கு நாற்பது கல் ஓடுகிறது. இவ்வாறு ஒரு புகைவண்டி சூரியனிடம் ஓடுமானால், நமக்கு அங்கே போக 363 வருஷங்களாகும். ஆனால், வேதநூற் பிராயம் நூறுதானே. பீரங்கியிலிருந்து வெளிக்கிளம்பி யோடுகிற குண்டு, விநாடிக்கு (Second) 2,00 அடி ஓடுகிறது. சூரியன்வரை இடைவிடாதுபோகக்கூடிய ஒரு குண்டு இருந்தால், அஃது, இந்த வேகத்தில் சென்று, சூரியனைச்சேர, எட்டு வருஷங்களாகும். ஒளியோ, மிக விரைந்து செல்கின்றவொன்றாம்; இது ஒருவிநாடிக்கு 186,000 கல் தொலைவு ஓடி வருகிறது. சூரியனிடத்திலிருந்து இந்த ஒளி பூமிக்குவர 500 விநாடிகள் அல்லது $8\frac{1}{4}$ நிமிஷம் ஆகிறது. சூரியனிலிருந்து வியாழன் பூமியைவிட ஐந்துமடங்கு அதிக தூரத்திலும், சனி ஒன்பது மடங்கு அதிக தூரத்திலும், நிருதி பத்தொன்பது மடங்கு அதிக தூரத்திலும், வருணன் முப்பது மடங்கு அதிக தூரத்திலும், இருப்பதை, நாம் மனதால் எவ்வாறு உணர்வது?

வேகம்:—மேலே, பல பொருள்களின் வேகங்களைக் கண்டோம். பூமியும் மிக வேகமாகச் செல்லுகின்றது. தன்னைத்தானே, ஒருமுறை சுற்றிவர இப்பூமிக்கு 24 மணி நேரம் செல்கின்றது. இதனால்தான், இரவும் பகலும் தோன்றுகின்றன. இந்த வேகம், தற்காலத்திய ஆகாய விமான வேகங்களைக் காட்டிலும் மிக மிக அதிகம். பூமி, ஒரு நிமிஷத்தில், ஏறக்குறைய பதினேழு கல் தூரம் ஓடுகின்றது. இவ்வதி வேகத்தினால், பூமியின் வடிவம், சரியான உருண்டையாக இராமல், ஒரு பந்தை மேலும் கீழுமாக அழுத்தினாற்போல, விளங்குகின்றது. மத்திய பாகமான நாடி மண்டலத்தே, சற்றுக் குவிந்தும், துருவ மண்டலத்தே சற்றுத் தட்டையாயும் இருக்கிறது.

அளவு:—இதன் குறுக்களவு 7981 கல். இந்தப் பூமியின் எடை 5,890,000,000,000,000,000,000 டன்கள்; 530 சங்கம் மணங்குகள் எனலாம். இப்பூமியைப் பற்றிய விஷயங்களை, நாம், பூகோள சாஸ்திரத்தில் காணலாம்.

சீவராசிகள்:—இப்பூமாதேவி பெற்ற மக்கள்,ஒருவகைச்சீவராசிகள் அல்லர்: ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர்வரையில், பற்பல விதங்களாய்ப் பற்பல சித்திர உருவங்களோடும், நடமாடுகின்றனர். முதலில், இவள் கருவுற்றது, பலகோடி வருஷங்களுக்கு முன்னரே என்று, நிலநூற் புலவர்கள் (Geologists)கூறுகின்றனர். ஆறுகள் அடித்துக் கொண்டுபோய்க் கடலிலே 5000 வருஷத்தில் ஓரடி உயரமாகத் தள்ளிய வண்டல்கள் கல்லாக இறுகி 6000 அடி உயரமாகக் கிடப்பவற்றை, ஆராய்ந்து, இந்தப் பூமிக்குக் குறைந்தது மூன்றுகோடி வயதாவது ஆகியிருக்கவேண்டும் என்று கணக்கெடுத்துள்ளார்கள். இவ்வளவு வயதாகியும் இவள் கிழவியாகிவிடவில்லை; இன்னும் யௌவன பருவத்திலேயே இருக்கிறாள். இவள்,இன்னும் தன் மக்களை ஈன்று கொண்டே வருகின்றாள். இவள் பெறும் மக்களுக்குப் போதுமான உணவுப்பொருள் கிடைப்பதும்,அரிதாய்க்கொண்டே வருகின்றது.காசிபர், அசுரருக்கும் சுரர்களுக்கும் தந்தையார் எனப் புராணங்கள் கூறுகின்றன; பூமியை, அவருடைய மனைவி என்று கூறிக் காசிபி, என்று பெயரிடுகின்றனர். இதற்கேற்ப, ஒரு பக்கத்தில் கடவுளின் தன்மைபெற்ற பல சமயத் தலைவர்களான மகாத்மாக்களைப்பெற்றெடுத்தும், மற்றொரு பக்கத்தில், துன்பமே வடிவாய்க் கொடுமையே தொழிலாய், மூர்க்கவிகாரசொரூபிகளான மாக்களையும், விலங்குகளையும், பறவைகளையும் பெற்றெடுத்தும், இவர்களைப் பாதுகாக்க, உணவுப்பொருள்களை விளைவித்தும், விளங்குகின்றாளிவ் வுலகமாதா.

பெற்ற தாயரும் பெறுவித்த தந்தையுஞ் சேடியும்
மற்ற யாவரும் மக்களென் றொருபெயர் வகிப்பர்
சொற்ற மக்களுக் கொருதிருத் தாயினைச் சொல்லின்
உற்ற பூமக ளன்றியும் வேறெவ ருண்டால்.

புவியேழுபது 10.

### 3. (1) சந்திரன்

கம்பை நூறு நூறியல் கவினுழி மூன்றோடும்
அம்பிற் போகிய பானிறப் புரவிக ளணிந்த
பைம்பொற் றேரின்மேற் பருதிவெங் கதிர்பட வுயிர்கள்
வெம்பு நோய்கெட வெண்மதிக் கடவுள்வீற் றிருக்கும்.

இலிங்கபுராணம் (அத் - 54 - 2)

புனைந்துரை:—இந்தப் பூமிதேவியைச் சுற்றி, ஒரு வெண்குழவி மாதத்திற்கொரு சுற்றாக, எப்போதும் வலம் வந்து கொண்டிருக்கிறது. திருமால், பாற்கடல் கடைந்தபொழுது, இது, அதன் உதரத்தின்நின்றும் மேலே எழுந்ததென்பர். அக்காலத்திலிருந்து, இக்காலம்வரை, இது வானத்தே தவழ்ந்து செல்கிறதாம். இதனைச் சந்திரன் என்பர். இதனைப் பல தேசத்தாரும் புகழ்ந்து பேசுவர். இத்தாலியர் டைஆனா (Diana) என்றும், ரோமர் ஆர்டிமிஸ் (Artemis) என்றும், கன்னியர் வழிபடும் கடவுட் பெருமாட்டியாகப் போற்றி வந்தனர். நமது நாட்டிலும், கன்னிப் பெண்கள் எருமுட்டையை வைத்துப் பிறையைத் தொழுது வந்தனர் என, அறிகிறோம். பெண்களிட்ட எருவால் வளர்கின்றது பிறை, எனப் புலவர்களும் புனைந்துரைப்பது மரபாகிவிட்டது. இவ்வுபகிரகம், இரவில், நமக்குத் தண்ணொளி தந்து களிக்கச் செய்கிறது. ஆயிரம் நக்ஷத்திரம் ஒன்று சேரினும் ஒரு சந்திரனொளியாகாதென்று கவிகள் கூறுவர். இத்தகைய வெண்மதியைத் தூரதிருஷ்டியால் எக்காலத்திலும் காண எல்லாவித வசதிகளும் உள்ளன. இவ்வாறு, இதனைப்போல, ஆராய்ச்சிக்கிடந்தரும் கோளம், வேறொன்றும் இல்லை. கோள ஆராய்ச்சி, முதலில், இதனைக்கொண்டே தொடங்கியதெனலாம்.

அளவு:—சந்திரன், பூமிக்கு 230,900 கல் தொலைவில் இருக்கின்றான். இக்கோளத்தின் குறுக்களவு 2160 கல். பூமி ஐம்பத்தாறு பங்காக விளங்கினால், அதனில் ஒரு பங்காகவே சந்திரன் விளங்குகிறான். இக்கோளத்தை நமது பூமியின்மேல் வைத்தால், நம் இந்தியாவின் அளவிருக்கும்.

களங்கம்:—இதனில் தோன்றும் களங்கத்தைப் பாடாத புலவனே இல்லை. பாற்கடலிலிருந்தும் இது எழுந்தபோது, அக்கடற்சேறு ஒட்டிக்கொண்டதாம்; அதுவேதான் இந்தக் களங்கம் என்று பாடுகின்றார் ஒரு புலவர். முயல் என்பர் சிலர்; மான் என்பார் சிலர்; ஆலமரத்தடியில் ஔவையார் கிழவி அப்பம் சுடுகின்றாள், எனச் சிறுவர் கூறுவர். இக் களங்கத்தைத் தூரதிருஷ்டிக்கண்ணாடி வழியே காணும்போது, அது, மலைப்பிரதேசம் என்பது தெளிவாகிறது. மலைப்பிரதேசங்கள் சந்திரனில் அதிகம்.

முன்னே சூரியன்:—தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கொண்டு ஆராயும்போது, குளிர்ச்சியே வடிவாகித் தன் இனிய கலையொளியைப் பரப்பும் சோமனும், சூரியனைப்போல, முன் ஒருகாலத்தில், கடுமையாகவே இருந்தான் என்பதற்குப் பலசான்றுகள் கிடைக்கின்றன. அங்கே, தணிந்த எரிமலைகள் அநேகம் இருக்கின்றன. இப்போதோ அக்கோளத்தில், நெருப்பு என்பதே சிறிதுகூடக் கிடையாது. நீர்மட்டுமன்றிக் காற்றும் அங்கு உறைந்துகிடக்கின்றது. அத்தகையது அங்குள்ள சீதோஷ்ண நிலை. ஆதலால் நாம் சுவாசிப்பதுபோன்ற காற்றும், நாம் பருகுவதுபோன்ற நீரும் அங்கே கிடைப்பது அருமை. பூரண சூரிய கிரகண காலத்தே, இதனை நன்றாகத் தூரதிருஷ்டி வழியாக ஆராயலாம். அதன் பயனாகவே, இவ்வாறெல்லாம் அநுமானித்துள்ளார்கள். அங்கே, வாயுமண்டலமே இல்லைஎன்பார் சிலர். ஆகையால், சந்திரன் நமக்குக் காட்டிவரும் முகமாகிய பாகத்தே, புல்பூண்டு மரம் செடி முதலியனவோ, வேறு ஜீவராசிகளோ, இல்லை.

கலைகள்:—இருபத்தொன்பது அல்லது முப்பது நாட்களில் இச்சோமன் வளர்ந்து குறைந்து மறைந்து பலதிறப்படுவதைக் காண்கின்றோம். தக்கனை தனது மாமனால் சபிக்கப்பட்டுத் தன் கலைகள் தேய்வடைந்துநின்றான் என்றும், இப்படித் தேய்ந்து மூன்றாம் பிறைச் சந்திரன் அளவில் இருக்கையில், இவன் சிவபெருமானைச் சரணாகதி யடைந்தனன் என்றும், அவர், அவனை, அக்காலத்தில், தன் சடாமகுடத்தே அணிந்துகொண்டு, பிறையளவிற் குறையாமல், வளரும்படி வரம் அளித்தனர் என்னவும், சிவபுராணக் கதைகள் கூறும். தக்கனது சாபப்படி தேய்ந்தும், சிவபெருமானுடைய வரத்தின்படி வளர்ந்தும் வருகிறான் சந்திரன் என்பர், வைதிகர்கள். இதனை விஞ்ஞான சாஸ்திரத்தின்படி ஆராய்வோம். இக்கலைகள் வளர்பிறையில் வளர்கின்றன. அன்னவாறு வளரும்போது. சந்திரனுடைய ஒளியும், கலைகளோடு வளர்ந்துவருகின்றது. சந்திரன் பூமியைப் பிரதக்ஷணம் செய்துவருகையில், தன்னைத் தானே ஒரு முறை, ஆத்மப் பிரதக்ஷணமும் செய்கிறான். அவ்வாறுசெய்கையில், ஒரு முகத்தையே நமக்குக் காட்டுகிறான். பின்புறத்தைக் காட்டுவதே இல்லை. ஈதன்றியும் நாம் காணும்சந்திரனுடையமுகத்தின் ஒவ்வொருபாகத்திலும், பதினைந்து நாள் சூரிய வெளிச்சம், விடாது படுகின்றதென்பது திண்ணம். இவ்வாறுசந்திரனிலுள்ள பிரதேசங்களில், பதினைந்துநாள் ஓயாமல் இரவும் பகலும் சூரியோஷ்ணம் இருந்தும், அங்கே, அனைத்துமே உறைந்துகிடப்பானேன்? ஒருபொருளும் தலைகாட்டாதிருப்பதேன்? இச்சங்கை, பல ஆராய்ச்சிகளுக்கு இடந்தரும். சந்திரனுடைய முகத்தையே, நாம் அறிவோம்; அவனுடைய பின்புறம் எத்தகையதோ, நாம் அறியோம்

சந்திரவொளி:-சந்திரனுடைய ஒளி, சூரியனுடைய பிரதிபிம்ப ஒளியேயாகும். மஹாவிஷ்ணு, பாற்கடலினின்றும் வந்த அமுதத்தைத் தேவர்களுக்குத் தந்தபின், அவ் வமுதகலசத்தைச் சந்திரனிலே வைத்ததாகப் புராணம் கூறும். அதனாலேதான், சந்திர ஒளியின் நின்றும் அமுதகிரணங்கள் உலகிலே பாய்கின்றனவாம். அவ்வமுதத்தைத் தேவர்கள் உண்ணுகின்றார்களாம். இனிய அமுதம் எனப் பொருள்படும் திங்கள் என்பதன்றோ, இதன் பெயர். இதனையே எண்ணிய தாயுமானவர்

சருகு சலபக்ஷணிக ளொருகோடி யல்லால்
சகோர பக்ஷிகள் போலவே
தவள நிலவொழுகமிர்த தாரையுண் டழியாத
தன்மையர் அனந்த கோடி

என்று மௌனகுரு வணக்கத்தில் கூறினார்போலும். சோமன், விழித்திருப்போர்க்கு நன்மை பயக்கினும், தன் ஒளியில் நித்திரை செய்பவனைத் துன்புறுத்துவான் என்று நமது வைத்தியரும் மேனாட்டு வைத்தியர்களும், கூறுகின்றனர். உன்மத்தம் பிடித்தவர்களின் பைத்தியம் அதிகரிப்பதும், சமுத்திரம் நீர் பொங்கிஅதிகரிப்பதும், குறைந்து வடிவதும், பூரண சந்திரன் செய்யும் திருவிளையாடல்களல்லவா? இவற்றைப்பற்றிஅறிந்து கொள்ளவேண்டி, விஞ்ஞான சாத்திரிகள், சந்திரன் ஒளியை, ஒளியுடைக்கும் கருவியினுதவியால் ஆராய்ந்துவருகின்றனர்.

காலரா மருந்து
IDL வின்க்யூர்
ஏமாற வேண்டாம்
நேரில் பெற்றுக்கொள்க
ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
ஸ்ரீகர கஸ்தூரிமாத்திரை. 0-4-0
கோரோஜனை .. 0-6-0
பாலசஞ்சீவினி .. 0-4-0
ப்ரஸூதா டானிக் ரூ 1
40 நாட்கள் உபயோகப் பாக்கெட் அணா ஒன்று
I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரண பாக்கெட் I.D.L. மெடிகேட்ட டப்பி
ஜ்வரேக்
I.D.L. ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
போலிகள் இருப்பதால் வீதிகளில் வாங்க வேண்டாம்

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

5 ஆண்டுகளில் 80 மனைவிகள்:—கான்ஸ்டண்ட்டைன் மேனியா என்ற ருமானிய நாட்டு இளைஞன் 1928-ல் தான் மேஜரானான். அவனுடைய பெற்றோர் அவனுக்கு ஏராளமான சொத்து வைத்துவிட்டு இவன் மேஜராவதற்கு முன்னமே இறந்துபோனார்கள். இவ்வாலிபன் அதுபோது இராணுவத்தில் பயிற்சி பெற்றுக்கொண்டு வந்தானெனினும் உடனே அதைவிட்டு நின்று பல நண்பர்களுடன் சேர்ந்து, ஐரோப்பாவிலுள்ள பல நாகரிகமான ஹோட்டல்களுக்கும் கேளிக்கை விலாசங்களுக்கும் சென்று தன்னிடமிருந்த பணத்தையெல்லாம் இழந்துவிட்டான். பின்னர் அவன் பெண்வேட்டையாடுவதில் இறங்கிவிட்டான். அதாவது கடந்த ஐந்தாண்டுகளுக்குள் அவன் 300 பெண்களைச் சந்தித்துக் காதலித்து, உறுதிகளும் பிரமாணங்களும் செய்து கொடுத்திருக்கின்றான். மாஜிஸ்ட்ரேட் அவனைக் கேட்டபோது, "நான் ஏராளமான பெண்களைக் காதலித்ததும், கல்யாணம் செய்துகொண்டதும் உண்மைதான். நான் இன்பமான வாழ்க்கை நடத்துவதில் பிரியன்; எனக்குப் பெரும் பொருள் வேண்டியிருந்தது. பெண்கள் பலர் செய்த தந்திரங்களை உணர்ந்துகொள்ள என்னால் முடியவில்லை. அவர்களுள் பலர் தாங்கள் பணக்காரர்கள் எனக்கூறி என்னை மணந்துகொண்டார்கள். அவர்கள்கூறியவாறு அவர்களிடம் பணம் இல்லையென்பதை அறிந்த நான் அவர்கள் பணத்தை இருந்தவரையில் செலவு செய்து பிறகு வேறொரு மாதை மணந்தேன். இவ்வாறாக 17 வயதுப் பெண்ணிலிருந்து 45 வயது விதவை வரை பலரை நான் மனைவிகளாகப் பெற்று வாழ்ந்தேன்.

பொன்மயம்:—1886-ம் ஆண்டில் தென் ஆப்பிரிக்கா நகரமான ஜோகானஸ்ப்பர்க் பொன் மயமாகவே விளங்கி வந்ததாம். அங்கே அங்குலம் ஒன்றுக்கு 1600 பவுன் மதிப்புள்ள பொன் அகப்பட்டதாம்.

* * *

புண்களுக்குத் தேன் மருந்து:—அடிப்பட்ட காயங்களுக்கும் தீப் புண்களுக்கும் இன்னும் சிரங்கு முதலிய தோல் நோய்களுக்கும் தேன் நல்ல மருந்தாகும் என்று ஒரு ஜெர்மனிய பிரபல வைத்தியர் கூறுகிறார். இந்த வைத்தியர் இவரிடம் வரும் நோயாளிகளின் புண்கள் அல்லது காயங்கள்மீது தேனைத்தடவியே குணப்படுத்துகிறாராம். புண்களும் காயங்களும் வேறுமருந்துகளால் குணப்படுவதைவிட இந்தத் தேன் சிகிச்சையினால் சீக்கிரம் குணமடைகின்றனவாம்.

உடம்பை மூடுவது எதுவானாலும் அதுவே உடை என்று அனேகர் எண்ணிவிடுவது போல, மனிதர் கண்களுக்குப் பொதுவாக எல்லா இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகளும் ஒரே மாதிரியாகத் தோன்றலாம். ஆனால், பகுத்தறிவும் அழகின் தாமும் தெரிந்தவர், உடை யெவ்வாறு தைக்கப்பட்டிருக்கின்றதென்பதையும், அது நெடுங்காலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தையற்காரர் இடத்திலிருந்து வருகிறதாவென்பதையுங் கவனிப்பார்கள். 'நாஷனல்' பாலிஸிக்கு இந்தச் சிறப்பு முத்திரை யிருக்கிறது. கல்கத்தாவில் ஹெட் ஆபீஸ் உடைய

**நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடட்**

கொடுக்கின்ற ஒவ்வொரு பாலிஸிக்கும் முப்பது வருடத்திய திறமை வாய்ந்த இன்ஷ்யூரன்ஸ் காரியானுபவம் ஆதாரமா யிருக்கிறது.

அஸ்ஸெட்ஸ் 2½ கோடிக்கு மேல்
நடைமுதல் பிஸினஸ் 10 கோடிக்கு மேல்

ஏஜென்ஸி எடுத்துக்கொள்ள விரும்புகின்றவர் கீழ்க்காணும் விலாஸங்களுக்கு எழுதவும்.

ப்ரான்ச் ஸெக்ரடரி, நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங், 362. சைனாபஜார் தெரு, சென்னை.

ஆர்கனைஸிங் ஸெக்ரடரி, ஸப் ஆபீஸ், 171. ந்யூ ஸ்ட்ரீட், மதுரை.

சீப் ஏஜன்ஸி, ஆர்காட் ஸ்ரீநிவாசார் தெரு, பெங்களூர் ஸிடி.

நெருப்பு மோட்டார் விபத்துக்கள்,
அஸ்ஸோஸியேடெட் நாஷனல் பையர் அண்ட் ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பனியால் (லிமிடெட்) இன்ஷ்யூர் செய்யப்படும்.

**இண்டோ-கம்மர்ஷியல்**

**பாங்க், லிமிடெட்.**

**மாயவரம்**

சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனாபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்–ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதறாஸ்.

**சிறந்த பலவிருத்தி ஔஷதம்**

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனம்! "காம சாஸ்திரம்" இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)